Registered as a Newspaper
பக்கங்கள் 12 விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 38
கதிர் : 313

வியாழக்கிழமை 05 ஒக்ரோபர் 2023

புரட்டாதி 18 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

## 7 கட்சிகள் நேற்றிரவு ஆராய்வு

யாழ்ப்பாணம், ஒக்.5
முல்லைத்தீவு மாவட்ட நீதிவானுக்கு விடுக்கப்பட்ட உயிர் அச்சுறுத்தல் மற்றும் »04







யாழ்ப்பாணத்தில் நேற்று

# நீதித்துறை சுயாதீனத்துக்காக மனிதச்சங்கிலிப் போராட்டம்!

**யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 5**

**முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி.சரவணராஜாவுக்கு விடுக்கப்பட்ட உயிர் அச்சுறுத்தல் மற்றும் அழுத்தங்களைக் கண்டித்து யாழ்ப்பாணத்தில் நேற்று மனிதச் சங்கிலிப் போராட்டமும், ஆர்ப்பாட்டப் பேரணியும் நடத்தப்பட்டன.** »11

## அரசியல் தஞ்சம் கோரவே நீதிபதி பொய்க்குற்றச்சாட்டு

சரத் வீரசேகர கூறுகின்றார்

கொழும்பு, ஒக்.5
மேற்குலகில் அரசியல் தஞ்சம் பெறுவதற்காக தமது சுயகௌரவத்தையே காட்டிக்கொடுக்கும் நபர்களுக்கு, நிழல் தந்த தாய்நாட்டைக் »11

## திடீர்ப் போராட்டத்தால் பயணிகள் திண்டாட்டம்

ரயில் நிலையங்களில் இராணுவம் குவிப்பு

கொழும்பு, ஒக்.5
ரயில் உப ஒழுங்குபடுத்தல் சேவையாளர்கள் திடீரென ஆரம்பித்த பணிப்புறக்கணிப்பால் நேற்றுப் புதன்கிழமை மாலை பல ரயில் »11

வடக்கு மாகாணத்தில்

## சட்டத்தரணிகள் போராட்டம் தற்காலிகமாக இடைநிறுத்தம்

முல்லைத்தீவில் மட்டும் தொடரும்

யாழ்ப்பாணம், ஒக்.5
முல்லைத்தீவு நீதிவான் ரி.சரவணராஜாவுக்கு ஏற்படுத்தப்பட்ட அழுத்தங்கள், நெருக் »04

## மன்னாரிலும் நேற்று கண்டனப் போராட்டம்

மன்னார், ஒக்.5
நீதித்துறைக்கு எதிரான அடக்குமுறைகளைக் கண்டித்து மன்னாரில் நேற்றுக் கண்டனப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.
மன்னார் மாவட்ட இளைஞர்கள் மற்றும் சிவில் அமைப்பினர் இணைந்து »11



## நள்ளிரவுடன் எகிறுகின்றது எரிவாயு சிலிண்டர் விலை!

கொழும்பு, ஒக்.5
லிட்ரோ மற்றும் லாப்ஃஸ் எரிவாயு நிறுவனங்கள் சமையல் எரிவாயு சிலிண்டர்களின் விலை »04

## உயர்தரப் பரீட்சை ஜனவரி 4ஆம் திகதி

கொழும்பு, ஒக்.5
2023ஆம் ஆண்டுக்கான க.பொ.த. உயர்தரப் பரீட்சை ஜனவரி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்று பரீட்சைகள் திணைக்களம் அறிவித் »04

## விபத்தில் ஒருவர் சாவு!

யாழ்ப்பாணம், ஒக்.5
காங்கேசன்துறை, உப்புமடம் சந்தியில் நேற்று புதன்கிழமை இரவு 9 மணியளவில் நடந்த விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
வீதியோரம் நிறுத்தப்பட்டிருந்த காரின் கதவு திடீரெனத் திறக்கப்பட்டதால் வீதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் அதனுடன் »04

கொக்குத்தொடுவாய்

## மனிதப்புதைகுழி அகழ்வுக்கு நிதி வழங்க கச்சேரி பின்னடிப்பு!

அடுத்த கட்டப் பணிகள் தடைப்படும் அபாயம்
மழையால் தடயப்பொருள்கள் அழிவுறும் நிலை

முல்லைத்தீவு, ஒக்.5
கொக்குத்தொடுவாயில் இனங்காணப்பட்ட மனிதப்புதைகுழி அகழ்வுகளைத் தொடர்ச்சியாக முன்னெடுப்பதற்கு நிதி இல்லை »11

## காங்கேசன் – நாகப்பட்டினம்; இந்தவார இறுதியில் கப்பல்!

யாழ்ப்பாணம், ஒக்.5
நாகப்பட்டினம் – காங்கேசன்துறை பயணிகள் கப்பல் சேவை இந்தவார இறுதியில் (சனி அல்லது ஞாயிற்றுக்கிழமை) ஆரம்பிக்கப்படும் என்று ஆஷா ஷிப்பிங் ஏஜென்சிஸ் நிறுவனப் பிரதி முகாமையாளர் தெரிவித்துள்ளார்.
இந்தவார இறுதியில் »11

இன்றுமுதல்

## உலகக்கிண்ண கிரிக்கெட் ஆரம்பம்!

உலகக்கிண்ணக் கிரிக்கெட் தொடர் இந்தியாவில் இன்று ஆரம்பமாகின்றது. »11

**உலகக் கிண்ணக் கிரிக்கெட் உதயனின் பரிசுப் புதையல்**

விபரமும் விண்ணப்பப்படிவமும் உள்ளே
பக்கம்:-02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியியற் கல்லூரிகள் பல்கலையாகத் தரம் உயரும்

## அமைச்சரவை அங்கீகாரம்

கொழும்பு, ஒக். 5

தேசிய கல்வியியற் கல்லூரிகளை பல்கலைக்கழகங்காகத் தரமுயர்த்த அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

நாட்டின் அனைத்து ஆசிரியர்களையும் பட்டதாரிகளாக்கும் நோக்கில் இந்த நடைமுறை அங்கீகரிக்கப்பட்டுள்ளது. கல்வியியற் கல்லூரிகளைப் பல்கலைக்கழகப் பீடங்களாக உயர்த்துவதற்காக கடைப்பிடிக்கவேண்டிய நிர்வாக மற்றும் சட்டப் பொறிமுறைகள் தொடர்பாகப் பரிந்துரைகளைச் சமர்ப்பிப்பதற்காக 2019ஆம் ஆண்டில் மூத்த பேராசிரியர் குணபால நாணயக்கார தலைமையில் நிபுணத்துவக் குழுவொன்று நியமிக்கப்பட்டது.

இந்தக் குழு தற்போதுள்ள 20 கல்வியியற் கல்லூரிகளில் 19 கல்லூரிகளை பல்கலைக்கழக வளாகமாக உயர்த்துவதற்கும், 'இலங்கை கல்வியியற் பல்கலைக்கழகம் ' எனும் பெயரில் புதிய பல்கலைக்கழகமொன்றை நிறுவுவதற்கும் பரிந்துரைத்துள்ளது.

அந்தவகையில் சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய சட்ட வரைவொன்றைத் தயாரிப்பதற்கு கல்வி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கே அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ச-இ)

# புலமைப்பரிசில் பரீட்சை மேலதிக வகுப்புக்குத் தடை

கொழும்பு, ஒக். 5

ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சை தொடர்பான கருத்தரங்குகள், மேலதிக வகுப்புகள் மற்றும் செயலமர்வுகள் ஆகியவற்றுக்கு எதிர்வரும் 11 ஆம் திகதி நள்ளிரவு முதல் பரீட்சை நிறைவடையும்வரை தடை விதிக்கப்படுகிறது என்று பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தடையை மீறிச் செயற்படுவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். இந்த ஆண்டுக்கான தரம் -5 புலமைப்பரிசில் பரீட்சை எதிர்வரும் 15 ஆம் திகதியில் 2 ஆயிரத்து 888 பரீட்சைமத்தியநிலையங்களில் நடைபெறவுள்ளது. (ச-இ)

# 408 கிலோ ஹெரோய்ன் இந்தாண்டில் கைப்பற்றல்

**கொழும்பு, ஒக். 5**

**இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 408 கிலோ 309 கிராம் உயிர் கொல்லி ஹெரோய்ன் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது என்று போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.**

44 ஆயிரத்து 208 சந்தர்ப்பங்களில் இந்தப் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கையின்போது 44 ஆயிரத்து 241 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதேவேளை குறித்த காலப்பகுதியில் 12 கிலோ 995 கிராம் கொக்கெய்ன் போதைப்பொருள், 100 கிலோ 932 கிராம் ஐஸ் போதைப் பொருள் என்பனவும் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவு குறிப்பிட்டுள்ளது. (ச-இ)

## அவுஸ்திரேலியாவில்

# வதிவிட உரிமையைக் கோரி இலங்கையர்கள் போராட்டம்!

*யாழ்ப்பாணம், ஒக். 5*

*அவுஸ்திரேலியாவில் அரசியல் புகலிடம் கோரியுள்ள இலங்கைப் பெண்களும் ஈரானியப் பெண்களும் இணைந்து, தமது வதிவிட உரிமையை வலியுறுத்தி பேரணியில் ஈடுபட்டுள்ளனர்.*

*அவுஸ்திரேலியாவில் இருந்து கான்பெரா வரையில் சுமார் 600 கிலோமீற்றர் தூரம் கொண்டதாக இந்தப் பேரணி இடம்பெற்றது. நிரந்தர வதிவிட உரிமை இல்லாத காரணத்தால் தாம் தமது கல்விச்செயற்பாடுகளில் பல இடர்களை எதிர்நோக்கி வருவதாகவும், கடந்த பத்து வருடங்களாக தாங்கள் தற்காலிக வதிவிட அனுமதியுடன் தங்கியிருப்பதாகவும் தமக்கு நிரந்தர வதிவிட அனுமதியை விரைவாக வழங்குமாறும் பேரணியில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தினர்.* (ம-6)

# மீண்டும் விளையாட விருப்பம்

## சொல்கிறார் தனுஷ்க குணதிலக்க

கொழும்பு, ஒக். 5

நான் மீண்டும் கிரிக்கெட் விளையாட எதிர்பார்த்துள்ளேன். பயிற்சியில் ஈடுபட திட்டமிட்டுள்ளேன். - இவ்வாறு இலங்கை கிரிக்கெட் அணி வீரர் தனுஷ்க குணதிலக்க தெரிவித்தார்.

அவுஸ்திரேலியாவிலிருந்து நாடு திரும்பிய தனுஷ்க குணதிலக்க, கட்டுநாயக்க பண்டார நாயக்க சர்வதேச விமான நிலை யத்தில் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே அவ்வாறு கூறினார்.

அவுஸ்திரேலியாவில் சட்டம் வேறு. என்மீது வழக்குத் தொடுத்த பெண் பொய் சொல்லியிருந்தாலும், அவரிடமிருந்து இழப்பீடு பெறமுடியாது. என்னுடைய சட்ட வல்லுநர்கள் சிவில் வழக்கொன்றை அவர் மீது தாக்கல் செய்ய எதிர்பார்த்துள்ள னர்.

நான் மீண்டும் கிரிக்கெட் விளையாட எதிர்பார்த்துள்ளேன். பயிற்சியில் ஈடுபட திட்டமிட்டுள்ளேன். என்னை நம்பிய, எனக்கு ஆதரவு தெரிவித்த அனைவருக்கும் நன்றி, என்றார்.

அதேவேளை, உங்களுடன் வந்த, அவுஸ்திரேலியாவில் கைகோர்த்து வந்த யுவதி யார் என எழுப்பப்பட்ட கேள்விக்கு, 'நீங்கள் யாரென நம்புகின்றீர்கள் என ஊடகவியலாளர்களிடம் அவர் கேட்டார்,' ' காதலி' என நினைக்கின்றோம்' என ஊடகர்கள் பதிலளித்தனர். 'அப்படியே வைத்துக்கொள்ளுங்கள்.' எனக் கூறிவிட்டு விடைபெற்றார் தனுஷ்க குணதிலக்க. (ஒ-44)




2023 உலகக்கிண்ண தொடர்

உதயனின் பரிசுக்குவியல்



தினம் ஒரு பரிசு

இங்கிலாந்து - நியூஸிலாந்து அணிகளுக்கிடையிலான இன்றைய (05.10.2023) ஆட்டத்தில் வெற்றி பெறும் அணி எது?

விடை : ........................

பெயர் : ........................
முகவரி : ........................
தே.அ.இல : ........................
தொ.இலக்கம் : ........................

மெகா பரிசு

2023 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரை வெல்லும் அணி எது?

விடை : ........................

2023 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில் தொடர் ஆட்டநாயகன் யார்?

விடை : ........................

பெயர் : ........................
முகவரி : ........................
தே.அ.இல : ........................
தொ.இலக்கம் : ........................

நிபந்தனைகள்

- உலகக் கிண்ண கிரிக்கெட் கொண்டாட்டத்தின் பரிசுக் கூப்பன்கள் யாவும் உதயனில் பிரசுரமாகும். இந்தக் கூப்பன்களை நீலம் அல்லது சிவப்பு நிற பேனாவால் மாத்திரம் நிரப்பி அனுப்ப வேண்டும்.
- வெட்டி எழுதப்பட்ட, அழித்து எழுதப்பட்ட, பிரதியெடுக்கப்பட்ட தாளில் எழுதப்பட்ட எந்தவொரு கூப்பனும் நிராகரிக்கப்படும். ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்ப முடியும்.
- தினம் ஒரு பரிசுக்குரிய (தினம் ஒரு கேள்வி) கூப்பன்கள் அன்றைய தினம் பி.ப. 4 மணிக்கு முன்னதாக அனுப்பப்பட வேண்டும்.
- மெகா பரிசுக்குரிய கூப்பன் 17.11.2023 அன்று பி.ப. 4 மணிக்கு முன்னர் அனுப்பப்பட வேண்டும்.
- கூப்பன்கள் யாவும் **0767374444** என்ற வட்ஸப் இலக்கத்துக்கு அனுப்பிவைக்கப்படவேண்டும்.
- தேசிய அடையாள அட்டை இல்லாத சிறுவர்கள் தமது பெற்றோரின் அல்லது பாதுகாவலரின் தேசிய அடையாள அட்டை இலக்கத்தைக் குறிப்பிட்டு அனுப்ப முடியும்.
- வெற்றியாளர்களின் விவரங்கள் உலகக்கிண்ண தொடர் முடிவடைந்த பின்னர் உதயனில் வெளியிடப்படும்.

இன்றைய ஆட்டம்

ECB

இங்கிலாந்து - நியூஸிலாந்து

இடம் அஹமதாபாத்

நேரம் பி.ப. 2.00 மணி

NEW ZEALAND CRICKET


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதிபதிக்கு அச்சுறுத்தல் விசாரணைகள் ஆரம்பம்

கொழும்பு, ஒக். 5

**முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி.சரவணராஜா பதவி விலகிய விவகாரம் தொடர்பில் நீதிச் சேவைகள் ஆணைக்குழுவால் விசேட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதற்காக விசாரணைக் குழுவொன்று அமைக்கப் பட்டுள்ளது என நீதிச்சேவை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.**

உயிர் அச்சுறுத்தல் மற்றும் அழுத்தம் காரணமாக முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி.சரவணராஜா பதவி விலகி, நாட்டைவிட்டு வெளியேறியுள்ள விவகாரம் இலங்கை அரசியலில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இது தொடர்பில் சுயாதீன விசாரணை முன்னெடுக்கப்பட்டு உண்மை கண்டறியப்பட வேண்டும் என பல தரப்பினரும் வலியுறுத்தி வருகின்றனர்.

இந்தநிலையில் நீதிச்சேவை ஆணைக்குழுவாலும் விசாரணை முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக குற்றப் புலனாய்வுப் பிரிவும் விசாரணைகளை நடத்திவருகின்றது. (ம-44)

## நவராத்திரியை முன்னிட்டு சைவசமய அறிவுப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஒக். 5

நவராத்திரியை முன்னிட்டு இணுவில் சிவகாமி அறநெறிப் பாடசாலை மற்றும் இணுவில் இந்துமகாசபை ஆகியவற்றின் ஏற்பாட்டில் சைவசமய அறிவுப் போட்டிப் பரீட்சை நடத்தப்படவுள்ளது.

இந்தப் பரீட்சை எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை இணுவில் மத்திய கல்லூரி மண்டபத்தில் மூன்று பிரிவுகளாக நடைபெறவுள்ளது.

ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப் பெறுபவர்களுக்குப் பெறுமதியான பரிசில்களும், ஐந்து ஆறுதல் பரிசில்களும் வழங்கப்படும்.

முதலாம் பிரிவான தரம் - 04, 05 மாணவர்களுக்கு அன்றையதினம் காலை 8 மணிக்கும், இரண்டாம் பிரிவான தரம் - 6, 7 மாணவர்களுக்கு மு.ப.10 மணிக்கும், மூன்றாம் பிரிவான தரம் - 8,9 மாணவர்களுக்கு நண்பகல் 12 மணிக்கும் போட்டிப் பரீட்சைகள் இடம்பெறவுள்ளன.

போட்டியில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் தமது பெயர், தரம், கல்வி கற்கும் பாடசாலை அல்லது அறநெறிப் பாடசாலையின் விவரங்களை நாளை வெள்ளிக்கிழமைக்கு முன்பதாக 0778435479 என்ற 'வட்ஸ் அப்' இலக்கத்துக்கு அனுப்பி தமது வரவை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு இணுவில் சிவகாமி அறநெறிப் பாடசாலை நிர்வாகம் அறிவித்துள்ளது. (ச-66)



யாழ். பல்கலைக்கழக

## சித்த மருத்துவர் நித்தியப்பிரியா பட்டப்படிப்பில் இந்தியாவில் தங்கம்

யாழ்ப்பாணம், ஒக். 5

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சித்த மருத்துவ விரிவுரையாளர் மருத்துவர் நித்தியப்பிரியா சிவராம், தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்தில் பட்டமேற்படிப்பு குழந்தை மருத்துவத்துறையில் முதலிடம் பெற்று தங்கப்பதக்கத்தைத் தனதாக்கியுள்ளார்.

இவர் 2020 ஆம் ஆண்டிலிருந்து 2022 ஆம் ஆண்டு வரையுள்ள காலத்தில் 3 ஆண்டுகளிலும் நடைபெற்ற மேற்படிப்புப் பரீட்சையில் அனைத்துப்பாடங்களிலும் அதி கூடிய புள்ளிகளைப் பெற்று தங்கம் வென்றுள்ளார்.

மருத்துவர் நித்தியப்பிரியா சித்தமருத்துவ குழந்தை மருத்துவத் துறையில் இலங்கையிலிருந்து சென்று பட்டமேற்படிப்பை முடித்து வந்த இரண்டாவது மருத்துவர் என்பதுடன் வரலாற்றில் இலங்கையிலிருந்து சென்று தங்கப்பதக்கத்தைப் பெற்ற முதல் மருத்துவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ச-27)

## செட்டிகுளம் ஆலயத்தில் விக்கிரகங்கள் சேதம்!

வவுனியா, ஒக். 5

செட்டிகுளம் - வீரபுரம் முத்துமாரி அம்மன் ஆலய சிலைகள், சில விஷமிகளால் அவற்றின் இருப்பிடங்களில் இருந்து பெயர்த்தெடுக்கப்பட்டுள்ளன.

ஆலயத்தின் நவக்கிரக விக்கிரகங்கள் மற்றும் வைரவர், முருகன், அம்மன் ஆகிய விக்கிரகங்கள் இருப்பிடங்களில் இருந்து பெயர்த்து எடுக்கப்பட்டுச் சேதமாக்கப்பட்டுள்ளன. ஆலயத்தில் பூஜைக்காக நேற்றுச் சென்ற ஆலயக் குருக்கள் சிலைகள் சேதமாக்கப்பட்டமையை அவதானித்து ஆலய நிர்வாகத்தினருக்கு அறிவித்தார். இது தொடர்பில் செட்டிகுளம் பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது.

பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-18-110)

சிறந்த கணக்கறிக்கை

## வல்வெட்டித்துறை நகரசபை தேசியத்தில் முதலாமிடம்!

2022ஆம் ஆண்டுக்கான அரசதுறைச் செயற்பாடுகளில், சிறந்த கணக்கறிக்கைத் திட்டத்துக்காக வல்வெட்டித்துறை நகரசபை தேசியத்தில் முதலாமிடத்தைப் பிடித்து தங்கப்பதக்கத்தைத் தனதாக்கியது. பருத்தித்துறை நகரசபை இரண்டாமிடத்தையும், வவுனியா நகரசபை மூன்றாமிடத்தையும் பெற்று முறையே வெள்ளி, வெண்கலம் ஆகிய விருதுகளை வென்றுள்ளன. அநுராதபுரத்திலுள்ள வடமத்திய மாகாண வளாகத்தில் அண்மையில் இடம்பெற்ற விருது வழங்கும் நிகழ்விலேயே இந்த விருதுகள் வழங்கப்பட்டுள்ளன. இதேவேளை பிரதேசசபைகளில் வவுனியா வடக்கு பிரதேசசபை முதலாமிடத்தையும், துணுக்காய்ப் பிரதேசசபை இரண்டாமிடத்தையும், வலிகாமம் மேற்கு பிரதேச சபை மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-100)

## புதினம் தெரியுமோ?

கடைசிச் சண்டையில ஆமி பிடிச்சுக்கொண்டு போன ஆக்களின்ர கதி என்னவெண்டே இன்னும் தெரியேலை. காணாமல் ஆக்கப்பட்ட ஆக்களைத் தேடி அவையின்ர தாய், தகப்பன், சகோதரங்கள், மனுசி எண்டு எல்லாரும் எல்லா இடமும் அலைஞ்சு திரிஞ்சும் ஒரு பிரியோசனமுமில்லை. கடைசியில இனித் தேடியலைய இடமேயில்லை எண்ட கட்டத்தில, காணாமல் ஆக்கப்பட்டவை இருக்கினமா, இல்லையா எண்டாவது சொல்லுங்கோ? எண்டு அவையின்ர சொந்தங்கள் தொடர்ச்சியாப் போராடிக்கொண்டு இருக்கினம். இந்தப் போராட்டங்கள் பெரிசா 'போக்கஸ்' பண்ணுப்படாட்டியும் அரசாங்கத்துக்கு வெளிநாட்டு மட்டங்களால கடும் பிறசர்தான். 'அவையின்ர கோரிக்கையில நியாயம் இருக்குத்தானே. அதை என்னெண்டு பார்த்துத் தீருங்கோ' எண்டுதான் எல்லா நாட்டுத் தூதுவர்மாரும் இலங்கைக்குச் சொல்லு கினமாம். அதால கானமயிலாடக் கண்ட வான்கோழி ஆடின டான்ஸ் மாதிரி, காணாமல் ஆக்கப்பட்ட வைக்கான போராட்டத்தைக் கொப்பியடிக்க வெளிக் கிட்ட சிங்களவர் சிலர் கிட்டடியில மூக்குடைபட்டிருக்கினமாம்.

'தமிழ் ஆக்கள் மட்டும் காணாமலாக்கப்படேலை. சிங்கள ஆக்களும் இப்பிடி காணாமலாக்கப்பட்டிருக்கினம்' எண்டு விசயத்தை இன்னொரு பக்கமாகத் திருப்பிப் போட அரசாங்கம் குறளிவித்தையெல்லாம் காட்டுது. அந்த வித்தையில ஒண்டுதான் 'காணாமல் போன எங்கட சொந்தங்களை மீட்டுத்தாங்கோ' எண்டு சிங்களவர் சிலர் கையில பதாகையளோட நிக்கிறதும். உண்மையாவே சில சிங்கள ஆக்கள் காணாமல் போயிருக்கினம் தான். சண்டையளில ஆமிக்காரர் அள்ளுகொள்ளையாச் சாகேக்க, அவையின்ர 'பொடியை' அரசாங்கம் வாங்காது. அப்பிடி வாங்கினால் தங்கட பக்கம் உண்மையான இழப்பு எவ்வளவு எண்டு தெரிஞ்சிடுமெல்லோ. அப்பிடி அரசாங்கம் பொறுப்பெடுக்காத ஆமிக்காரரின்ர சடலங்களை எல்லாம் இயக்கம் எரிச்சுப் போட்டுது. அவையள் ஆமிக்காரரின்ர பதிவில இண்டைக்கு வரைக்கும் காணாமற்போன ஆக்கள் தான்.

இப்ப விசயம் அதில்லை. கொழும்பில இருக்கிற காணாமல் ஆக்கப்பட்டோருக்கான ஒப்பீஸில கிட்டடில பத்துப் பதினைஞ்சுபேர் 'தங்கட சொந்தக்காரரை மீட்டுத்தரச்சொல்லி' ஆர்ப்பாட்டம் பண்ணி இருக்கினம். இப்பிடி ஆர்ப்பாட்டம் செய்தவையின்ர பிரச்சினையை அறிய, அந்த ஒப்பீஸ்காரர் அவையை உள்ளுக்க கூப்பிட்டுக் கதைச்சிருக்கினம்.

'சரி உங்கட சொந்தக்காரர் எப்ப காணாமல் போனவை? எங்க காணாமல் போனவை? அவையின்ர விவரத்தைத் தாங்கோ. நாங்கள் விசாரிச்சு சொல்லுறம்' எண்டு ஆர்ப்பாட்டம் செய்தவையிட்ட கேட்டிருக்கினம். ஆனால் வந்தவை ஒண்டும் கதைக்காமல் ஆளையாள் பார்த்து முழுசியிருக்கினம். பிறகு ஒருமாதிரி அந்தப் பதினைஞ்சு பேரும் 'சொறி சேர். நாங்கள் பங்களாதேஷ் எம்பஸிக்கு மகஜர் குடுக்க வந்தம். நாங்கள் நினைச்சதைவிட வேளைக்கே அந்த மனுவை அங்க வாங்கிட்டினம். அதால் மிச்சமுள்ள நேரத்துக்கு காணாமல் ஆக்கப்பட்டோர் ஒப்பீஸுக்குப் போய் ஆர்ப்பாட்டம் செய்யுங்கோ எண்டு மேலிடத்தில இருந்து ஓர்டர் வந்தது. அதுதான் இஞ்ச வந்தம். மற்றும்படி எங்கட சொந்தக்காரர் ஒருத்தரும் காணாமல் போகேலை' எண்டு உண்மையை ஒப்புக்கொண்டிட்டு போயிருக்கினம். எப்பவுமே டுப்ளிகேட்டால நிண்டுபிடிக்கேலாது கண்டியளோ.

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்நிலை காப்புச் சட்டத்துக்கு எதிராக உயர்நீதிமன்றில் மனு!

கொழும்பு, ஒக்.5

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசால் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ள நிகழ்நிலை காப்புச் சட்ட வரைவுக்கு எதிராகப் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி உயர்நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்துள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் எதிர்க்கட்சி ஒன்றியத்தின் செயற்குழுவாலேயே இதற்கான நகர்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நிகழ்நிலை காப்புச் சட்டவரைவு நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் சமர்ப்பிக்கப்பட்டது. இந்தச் சட்டவரைவில் நிகழ்நிலை காப்பு தொடர்பான ஆணைக்குழுவை நியமித்தல் மற்றும் உறுப்பினர்களை நியமிப்பதற்கான ஜனாதிபதிக்குள்ள அதிகாரங்கள், நிறைவேற்று அதிகாரம் என்பன தன்னிச்சையாக செயற்பட வழிவகுக்கும். நீதிமன்றத்துக்குப் புறம்பான விசாரணை, தண்டிக்கும் அதிகாரம் போன்றன சம்பந்தப்பட்ட ஆணைக்குழுவுக்கு உள்ளபடியால் மக்களின் அடிப்படை உரிமைகள் மீறப்படுகின்றன.

இந்தச் சட்டவரைவு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை மற்றும் சர்வஜன வாக்கெடுப்புக்கு உட்படுத்தப்பட்டு நிறைவேற்றவேண்டும் என்று மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார, எதிர்க்கட்சி ஒன்றியத்தின் செயற்குழு உறுப்பினர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் மற்றும் வெலிகம மாநகரசபையின் முன்னாள் தவிசாளர் ரெஹான் ஜயவிக்ரம ஆகியோரால் இது தொடர்பான மனு நேற்று உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. மனுதாரர்கள் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி பர்மான் காசிம் முன்னிலையானார்.

அதேவேளை, உழைக்கும் ஊடகவியலாளர் சங்கம் உட்பட மேலும் சில அமைப்புகளும், தனி நபர்களும் இந்தச் சட்ட வரைவை ஆட்சேபித்து உயர்நீதிமன்றத்தில் மனுக்களைத் தாக்கல் செய்துள்ளனர். (அ-எ-44)

# மோ.போக்குவரத்து திணைக்கள வாய்மொழிப் பரீட்சை நாளை

கிளிநொச்சி மாவட்ட மோட்டார் வாகன போக்குவரத்துப் பிரிவால், எழுதுதல், வாசித்தல் திறன் குறைந்தவர்களுக்கான வாய்மொழிப்பரீட்சை நாளை வெள்ளிக்கிழமை நடத்துவதற்கு மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்தால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதுவரை சாரதி அனுமதிப்பத்திரம் பெறத்தவறியவர்கள் இந்த அரிய சந்தர்ப்பத்தைத் தவறவிடாது பயன்படுத்திக்கொள்ளுமாறு கிளிநொச்சி மாவட்ட மோட்டார் வாகன போக்குவரத்துப் பிரிவின் பிரதம மோட்டார் வாகன பரிசோதகர் விஜயசேகரா அறிவித்துள்ளார். மேலும், பரீட்சைக்குத் தோற்றுவதற்கு முன் ஏ-9 வீதி, கிளிநொச்சி பழைய கச்சேரி வளாகத்தில் அமைந்துள்ள மாவட்ட மோட்டார் வாகனப் போக்குவரத்துப் பிரிவின் மாவட்டக் காரியாலயத்துடன் தொடர்புகொண்டு பதிவுகளை மேற்கொள்வதுடன், மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளுமாறு தெரிவித்துள்ளார். (ஒ-113-214)

# போக்கட்டி அ.த.க.வில் ஆசிரியர் தின நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக். 5

போக்கட்டி அ.த.க. பாடசாலையில் ஆசிரியர் தின நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை மு.ப. 11மணிக்கு பாடசாலை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பாடசாலை அபிவிருத்திக்குழு நிர்வாக உறுப்பினர் திருமதி ம.திருமகள் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலய கணக்காளர் திருமதி சுதர்சினி சதீஸ்கண்ணா பங்கேற்கவுள்ளார். (ச-159)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** கணவன் – மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். தடைப்பட்ட வேலைகள் முடியும் நாள்.

**இடபம்:** ராசிக்குள் சந்திரன் இருப்பதால் செலவுகளைக் குறைக்க முடியாமல் திணறுவீர்கள். சந்தேகப் புத்தியால் நல்லவர்களை இழக்க வேண்டி வரும். வியாபார இரகசியங்களை வெளியிட வேண்டாம்.

**மிதுனம்:** குடும்பத்தைப் பற்றிய கவலைகள் வந்து நீங்கும். வெளிவட்டாரத்தில் யாரையும் விமர்சிக்க வேண்டாம். வியாபாரத்தில் பாக்கிகளை வசூலிப்பீர்கள். உத்தியோகத்தில் அலைக்கழிக்கப்படுவீர்கள்.

**கடகம்:** குடும்பத்தாரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். வெளிவட்டாரத்தில் செல்வாக்கு கூடும். சொந்த பந்தங்கள் சிலர் கேட்ட உதவியைச் செய்வீர்கள். வேற்றுமதத்தவர் அறிமுகமாவார்கள்.

**சிம்மம்:** உங்கள் செயலில் வேகம் கூடும். உடன்பிறந்தவர்களால் பயனடைவீர்கள். விருந்தினர் வருகையால் வீடு களை கட்டும். உங்களால் வளர்ச்சியடைந்த சிலரை இப்பொழுது சந்திக்க நேரிடும்.

**கன்னி:** குடும்பத்தில் ஒற்றுமை பிறக்கும். எதிர்பாராத இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும். விருந்தினர் வருகையால் வீடு களை கட்டும். பணப்புழக்கம் கணிசமாக உயரும். அலுவலகத்தில் மரியாதை கூடும்.

**துலாம்:** சந்திராஷ்டமம் இருப்பதால் ஒரே நாளில் பல முக்கியமான வேலைகளை பார்க்க வேண்டி வரும். வியாபாரத்தில் வேலையாள்களின் ஒத்துழைப்பின்மையால் லாபம் குறையும்.

**விருச்சிகம்:** எதிலும் தன்னம்பிக்கையுடன் எதையும் செய்யத் தொடங்குவீர்கள். பிள்ளைகளால் மதிப்புக் கூடும். கல்யாணப் பேச்சு வெற்றியடையும். மனைவி வழியில் ஆதரவு பெருகும்.

**தனுசு:** குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்புக் கூடும். அதிகார பதவியில் இருப்பவர்களின் நட்புக் கிடைக்கும். அரசால் ஆதாயம் உண்டு. வழக்கில் நல்ல தீர்ப்பு வரும்.

**மகரம்:** குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். ஆடம்பரச் செலவுகளை குறைத்து சேமிக்கத் தொடங்குவீர்கள். நட்பு வழியில் நல்லசெய்தி கேட்பீர்கள். உத்தியோகத்தில் அமைதி நிலவும்.

**கும்பம்:** திட்டமிட்ட காரியங்களை சிறப்பாக முடிப்பீர்கள். மகளுக்கு நல்ல வரன் அமையும். தாய்வழி உறவினர்களுடன் மனஸ்தாபம் வந்து நீங்கும். பயணங்களால் அலைச்சல் இருந்தாலும் ஆதாயமும் உண்டு.

**மீனம்:** குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். சிலர் உங்கள் உதவியை நாடுவார்கள். சகோதரர்கள் வகையில் நன்மை உண்டு. உங்களின் பூர்வீக சொத்து பிரச்சினைக்குத் தீர்வுகிடைக்கும்.

## நள்ளிரவுடன்...

களை அதிகரித்துள்ளன. இந்த விலை அதிகரிப்பு நேற்று நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

லிட்ரோ நிறுவனத்தின் 12.5 கிலோ நிறையுடைய சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை 343 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை 3 ஆயிரத்து 470 ரூபா என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

5 கிலோ நிறையுடைய சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை 137 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை ஆயிரத்து 393 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

2.3 கிலோ நிறையுடைய சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை 63 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை 650 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, லாப்ஃஸ் நிறுவன சமையல் எரிவாயு சிலிண்டர்களின் விலையும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

12.5 கிலோ நிறையுடைய சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை 150 ரூபா அதிகரிக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை 3 ஆயிரத்து 985 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

5 கிலோ நிறையுடைய சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை 60 ரூபா அதிகரிக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை ஆயிரத்து 595 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (அ-எ-இ)

## உயர்தரப்...

துள்ளது. 2023 ஆம் ஆண்டுக்கான க.பொ.த. உயர்தரப் பரீட்சை எதிர்வரும் ஜனவரி மாதம் 4ஆம் திகதி முதல் 31ஆம் திகதி வரை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

2023ஆம் ஆண்டுக்கான க.பொ.த. உயர்தரப் பரீட்சை எதிர்வரும் நவம்பர் மாதம் 5ஆம் திகதி நடைபெறும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

பல இடங்களில் குறிப்பாகக் கஷ்டப் பிரதேசங்களில் மாணவர்களுக்கான பாடத்திட்டங்கள் நிறைவு செய்யப்படவில்லை என்று நாடாளுமன்றத்தில் சுட்டிக்காட்டப்பட்டிருந்ததுடன், பரீட்சையைப் பிற்போடவேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பாக நாடாளுமன்றத்தில் சில தினங்களுக்கு முன்னர் கருத்துத் தெரிவித்திருந்த கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, உயர்தரப் பரீட்சை தொடர்பான முடிவு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் விரைவில் அறிவிக்கப்படும் என்று கூறியிருந்தார். (அ-எ-இ)

## 7 கட்சிகள்...

அழுத்தங்களுக்குக் கண்டனம் தெரிவித்து நேற்று யாழ்ப்பாணத்தில் மனிதச் சங்கிலிப் போராட்டம் முன்னெடுக்கப்பட்ட நிலையில், அடுத்த கட்டம் தொடர்பாக ஏழு தமிழ் அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து நேற்று இரவு ஆராய்ந்துள்ளன.

இந்தப் போராட்டங்களை வடக்கு-கிழக்கு மாகாணங்கள் ரீதியாக முன்னெடுப்பதா அல்லது வடக்கு மாகாண ரீதியில் முன்னெடுப்பதா என்பது தொடர்பாகவும், இந்தப் போராட்டங்களின் தொடர்ச்சியாக ஹர்த்தால் ஒன்றை முன்னெடுப்பது தொடர்பாகவும் ஆராயப்பட்டுள்ளது. இது தொடர்பாக எதிர்வரும் வெள்ளிக்கிழமை இறுதி முடிவு எடுக்கப்படும் என்றும் அந்தக் கட்சிகள் தெரிவித்தன. (அ-எ-26)

## விபத்தில்...

மோதுண்டு விபத்துக்குள்ளானார் என்று சம்பவ இடத்தில் நின்றவர்கள் தெரிவித்தனர்.

சுன்னாகத்தைச் சேர்ந்த மேசன் வேலை செய்யும் ஒருவரே உயிரிழந்துள்ளார். விபத்தில் உயிரிழந்தவரின் சடலம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சுன்னாகம் பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை முன்னெடுத்தனர். காரின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர். (அ-எ-26)

## சட்டத்தரணிகள்...

கடிகள் மற்றும் நாட்டைவிட்டே வெளியேறும் நிலை ஏற்படுத்தப்பட்டமைக்கு கண்டனம் தெரிவித்தும் நீதிபதிக்கு நீதி கிடைக்கவேண்டும் எனவும் வலியுறுத்தி வடக்கு மாகாணத்தில் சட்டத்தரணிகள் முன்னெடுத்து வந்த நீதிமன்றப் புறக்கணிப்புப் போராட்டத்தை பொதுமக்களின் நலன்கருதி தற்காலிகமாக இருநாள்கள் இடைநிறுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட சட்டத்தரணிகள் காலவரையறையற்ற நீதிமன்றப் பணிப்புறக்கணிப்பை கடந்த திங்கட்கிழமை முதல் முன்னெடுத்து வருகின்றனர். அவர்களுக்கு ஆதரவாக யாழ்ப்பாண மாவட்ட சட்டத்தரணிகளும் இருவாரங்களுக்கு பணிப்புறக்கணிப்பை முன்னெடுத்திருந்தனர்.

முல்லைத்தீவு மாவட்டம் தவிர்ந்த ஏனைய இடங்களில் முன்னெடுத்து வந்த பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தை இன்று வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கு முடிவெடுக்கப்பட்டுள்ளது என்று வட மாகாண வலய சட்டத்தரணிகள் சங்க உப இணைப்பாளரும், வவுனியா மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத் தலைவருமான பத்திநாதன் அன்ரன் புனிதநாயகம் தெரிவித்துள்ளார்.

பொதுமக்களது நலன் கருதி இன்றும் நாளையும் நீதிமன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவதெனவும் வரும் திங்கட்கிழமை பணிப்புறக்கணிப்பை மேற்கொண்டு கொழும்பு உயர்நீதிமன்றத்திற்கு முன்பாக நடைபெறும் போராட்டத்தில் பங்கேற்பது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். ([illegible]-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



நாளொரு நல்வார்த்தை

நீ விரும்பாததை யார் சொன்னாலும் செய்யாதே... நீ விரும்புவதை உலகமே எதிர்த்தாலும் செய்து முடி....

–லெனின்–


# தோலுரிந்த வேடம்

கனவான், மென்போக்கானவர், வளைந்து நெளிந்து காரியம் சாதிப்பவர், உணர்ச்சிகளை வெளிப்படுத்தாதவர், அரசியல் சாணக்கியம்கொண்டவர் என்று தன்மீது ஏற்றி வைக்கப்பட்ட அத்தனை விம்பங்களையும் ஒரு நேர்காணலில் போட்டுடைத்திருக்கிறார் இலங்கையின் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. ஜேர்மனியின் முதன்மை ஊடகமான 'டொச்வெல்' ஊடகவியலாளருடனான நேர்காணலில் ''ஐ.நா. இலங்கைமீது முன்வைத்த பொறுப்புக்கூறலில் இருந்து தவறிவிட்டதாக ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவை வெளியிட்ட அறிக்கையைப் பார்த்திருப்பீர்கள் தானே. அதைப்பற்றி என்ன சொல்கிறீர்கள்?'' ''ஈஸ்டர் தாக்குதல் குறித்து பலதரப்புகள் சர்வதேச விசாரணை தேவை என்று வலியுறுத்துகின்றனவே. அது தொடர்பாக நீங்கள் செயல்வடிவில் எதையும் முன்னெடுக்கவில்லையே?'' என்ற கேள்விகள் கேட்கப்பட்டதும் தான் தாமதம். அதுவரையும் கட்டிக்காத்துவந்த கனவான் அரசியல்வாதி என்ற வேடத்தை தூக்கி மூலையில் போட்டுவிட்டு, ரணில் தன்னிலை மறந்து, தன் நாமம் கெட்டு கடைந்தெடுத்த சிங்களப் பேரினவாதியாக தன் சுயரூபத்தை 'முட்டாள்தனமாக இப்படிக் கேள்வி கேட்காதே' என்ற கடுமையான வார்த்தைப் பிரயோகங்கள் ஊடாக வெளிப்படுத்தியிருக்கிறார்.

இந்த நேர்காணலில் தன்னைக் கேள்விகேட்பது ஓர் ஊடகவியலாளர் என்று ரணில் கருதியதாகத் தெரியவில்லை. நாடாளுமன்றத்தில் தன்னை நோக்கி, கேள்விக் கணைகளைத் தொடுக்கும் எதிர்க்கட்சியினரைப் போலவே அந்த வெளிநாட்டு ஊடகவியலாளரை ரணில் எதிர்கொண்டார். அதனாலேயே சபைக்குத் தகாத, ஆனால் இலங்கை நாடாளுமன்றத்தில் சர்வசாதாரணமாகப் புழக்கத்தில் உள்ள வார்த்தைகளால், ஊடகவியலாளருடன் ரணில் மல்லுக்கட்டியிருக்கிறார். இராணுவப் பின்புலத்தில் இருந்து பதவிக்கு வந்த கோத்தாபய கூட, இப்படி அநாகரிகமாகவும், ஆக்ரோஷமாகவும், இங்கிதம் கெட்டும் ஊடகவியலாளர்களிடம் நடந்துகொண்டதில்லை. இத்தனைக்கும் திரிபோலி என்ற கொலைப்படையின் சூத்திரதாரி கோத்தாபய. ஈவிரக்கமற்ற ஒரு கொலைப்படையை நடத்தியவர் கூட, ஊடகங்களைக் கண்டு மரியாதை செலுத்தும்போது, ரணிலுக்கு மட்டும் இப்படி ஊடகங்களிடம் 'என்னை இப்படிக் கேட்கும் உரிமை உங்களுக்கு இல்லை' என்று சீறிப்பாயும் முரட்டுத் துணிச்சல் எப்படி வந்தது? ஏன் வந்தது?

எல்லாமே பதவிபடுத்தும் பாடுதான்.

கனவான் அரசியல்வாதியாக இருந்தால் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெறமுடியாது என்பது ரணிலுக்கு நன்கு தெரியும். அதேபோன்று சிறுபான்மையினரின் வாக்குகளை மட்டுமே நம்பியிருந்தாலும் ஜனாதிபதிப் பதவியை அடையமுடியாது. இம்முறை அதிர்ஷ்டத்தால் கிடைத்தது போன்று அடுத்தமுறை ஜனாதிபதிப் பதவி கிட்டப்போவதில்லை. எனவேதான் 'நானொரு தூய சிங்கள இனவாதி' என்று நிறுவி, சிங்கள மக்களின் வாக்குகளைப் பறிக்கவேண்டிய தேவை ரணிலுக்குண்டு. இந்த நிலையில் தான் அமெரிக்காவை எதிர்த்தல், இந்தியாவை எதிர்த்தல் என்ற நிகழ்ச்சி நிரல்களைப் பகிரங்கமாகவே ரணில் முன்வைக்கத் தொடங்கியுள்ளார். சிங்கள மக்களின் பார்வையில் அமெரிக்க, இந்திய எதிர்ப்பென்பது இன்னொரு வகையில் பௌத்த – சிங்கள மேலாதிக்கத்தை நிறுவுவதாகவே அர்த்தப்படுகிறது. இந்திய எதிர்ப்பையும் மீறி சீனக் கப்பல்களின் வருகைகளுக்கும் ரணில் அனுமதி கொடுக்கிறார். தமிழர் பகுதிகளில் விகாரைகளை அமைக்கும் வேலைத்திட்டங்களை முடுக்கி விடுகிறார். அதற்காக சட்டத்தையும் தன் பொக்கற்றுக்குள் போட முனைகிறார். இப்போது சர்வதேச ஊடகங்கள் மீதும் தன் அடக்குமுறையைக் காட்டியிருக்கிறார். பொருளாதார நெருக்கடியில் நிற்கும் நாடொன்றின் தலைவர், இப்படி முன்பின் யோசனையில்லாமல் சர்வதேசத்தையும், சர்வதேச ஊடகங்களையும் பகைப்பதென்பது தற்கொலைக்கு ஒப்பானதே. ரணில் இலங்கையைத் தற்கொலைக்குத் தூண்டுகிறாரா?



# உள்ளூராட்சித் தேர்தல் இரத்து சர்வஜன வாக்கெடுப்புத் தேவை

## ஐ.ம.சக்தி வலியுறுத்து

**கொழும்பு, ஒக். 5**

**உள்ளூராட்சிசபைத் தேர்தலுக்காக கையளிக்கப்பட்ட வேட்பு மனுக்களை இரத்துச் செய்யும் முடிவுக்கு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி இணக்கம் தெரிவிக்கவில்லை. வேட்பு மனுக்களை இரத்துச் செய்வதற்கு நாடாளுமன்றில் சர்வஜன வாக்கெடுப்பே அவசியம் - இவ்வாறு எதிரணி பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியல்ல தெரிவித்துள்ளார்.**

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

உள்ளாட்சிசபைத் தேர்தலுக்காக சமர்ப்பிக்கப்பட்ட வேட்பு மனுக்கள் இரத்துச் செய்யப்படும் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. தேர்தலை ஒத்திவைக்க ஆலோசனைக் குழுக் கூட்டத்தின்போது நாமும் இணங்கியதாக செய்திகள் வெளியாகியுள்ளன. இந்தக் கூட்டத்தில் எதிரணியில் எவரும் பங்கேற்கவில்லை. ஆளுங்கட்சியினரே கலந்தாலோசித்து முடிவை எடுத்துள்ளனர்.

வேட்பு மனுக்களை இரத்துச்செய்ய நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மைப்பலமும், சர்வஜன வாக்கெடுப்பும் அவசியம் - என்றார். (ச-44)

# 'கிழட்டு மைனாவுக்கே' மக்கள் செல்வாக்கு!

## பெரமுன கூறுகிறது

கொழும்பு, ஒக். 5

மஹிந்த ராஜபக்சதான் போரை முடிவுக்கு கொண்டுவந்தார், அவரைச்சில அரசியல்வாதிகள் 'கிழட்டு மைனா' என விமர்சித்தாலும் மக்கள் மத்தியில் அவருக்கான செல்வாக்கு - மதிப்பு - குறையவே இல்லை என்று பொதுஜனபெரமுனக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான எஸ்.எம். சந்திரசேன தெரிவித்தார்.

மொட்டுக் கட்சித் தலைமையகத்தில் நேற்று நடை பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது.

சுதந்திரக்கட்சி எதிரணியில் உள்ளது என அந்தக்கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன கூறினாலும், அவரின் உறுப்பினர்கள் அமைச்சர்களாக உள்ளனர். இதன் மூலம் அவர்களின் இரட்டைக்கொள்கை அரசியல் தெளிவாகின்றது. மஹிந்த ராஜபக்சவுடன் இணையப்போவதில்லை எனவும் மைத்திரி கருத்து வெளியிட்டுள்ளார். மஹிந்தவுடன் இணைந்து போட்டியிட்டதால்தான் அவருக்கு நாடாளுமன்றம் வரமுடிந்தது என்பதை மறந்துவிட்டார்போலும்.

மஹிந்த ராஜபக்ச இந்நாட்டுக்காக பொறுப்புகளை நிறைவேற்றிய தலைவர். 30 வருட காலப் போரை முடிவுக்கு கொண்டுவந்தார். பெரிய அபிவிருத்தித் திட்டங்களையும் முன்னெடுத்தார். இப்பியானவர் எமது கட்சித் தலைவராக இருப்பது பெருமை அளிக்கின்றது. மஹிந்தவுக்கான மதிப்பு மக்கள் மத்தியில் உள்ளது. அதனை எவரும் மறுக்க முடியாது. மைனா, திருடன் என அவரை ஜே.வி.பி. காரர்கள் விமர்சித்தாலும், நாட்டை மீட்டது யார் என்பதுமக்களுக்குத்தெரியும்-என்றார்.(ஒ-44)

**நாளை**

06.10.2023

வெள்ளிக்கிழமை

புரட்டாதி 19

சுபநேரம் : 06.02 - 07.32

ராகுகாலம் : 10.32 - 12.02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## திருமதி நகுலாம்பிகை வாமதேவன்

தெல்லிப்பழையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நகுலாம்பிகை வாமதேவன் அவர்கள் கடந்த (02.10.2023) திங்கட்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிஐயா - இலட்சுமிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான முத்துத்தம்பி - நாகரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகளும் வாமதேவன் (பத்திரிகையாளர்) அவர்களின் அன்பு மனைவியும் வசீகரன், சுஜீத்தா, தர்மிஷா ஆகியோரின் அன்புத் தாயாரும் சகிலா, ஆனந் (யதிஸ்), அபிமன்யு ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான சண்முகநாதன், யோகாம்பிகை, ஞானாம்பிகை மற்றும் ஜெகதாம்பிகை, பத்மநாதன், ஜெகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிதம்பரேஸ்வரி, காலஞ்சென்றவர்களான சங்கரநாதன், சிங்காரவேலு மற்றும் சத்தியசீலன், கோசலா, ராஜ்வசந்தி, மகேந்திரராசா, சோமசுந்தரம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் டிவானுஜன், ஆகாசனா, சுஜானா, ஸ்ரவன், சம்யுக்தா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் **இன்று(05.10.2023) வியாழக்கிழமை மு.ப.10.00 மணியளவில் இல.50, ஞானவைரவர் ஒழுங்கை, பண்டத்திரிப்பு வீதி, தெல்லிப்பழையில்** உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தெல்லிப்பழை கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பண்டத்தரிப்பு வீதி, தெல்லிப்பழை
T.P: 0779919992

தகவல்:
குடும்பத்தினர்

# நினைவும் நன்றி நவிலலும்

மலர்வு
23 • 01 • 1956



உதிர்வு
29 • 09 • 2023

## வீரகத்தி குகராசா

(முன்னாள் இ.போ.ச. சாரதியும், உழவு இயந்திரத்திருத்துனரும்)

கைதடி நாவற்குழி மறவன்புலவை பிறப்பிடமாகவும், துர்க்கை அம்மன்வீதி ஆனந்தபுரம் மேற்கு, கிளிநொச்சியை நிரந்தர வசிப்பிட மாகவும் கொண்ட வீரகத்தி குகராசா அவர்கள் கடந்த (29.09.2023) வெள்ளிக்கிழமை சுகயீனம் காரணமாக இறைபாதம் அடைந்து விட்டார்.


நாம் துயருற்று இருந்தபோது தோள்நின்று உதவியவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி பதாகைகள் மூலமும், தொலைபேசி வழியாகவும் தமது இரங்கலைத் தெரிவித்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

(cs 25667) N.1)

# மரண அறிவித்தல்

தோற்றம்
13 • 08 • 1933



மறைவு
01 • 10 • 2023

## மயில்வாகனம் சிவபாலறாஜா

கல்லூரி வீதி, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் சிவபாலறாஜா கடந்த (01.10.2023) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தீபரத்தினம் மயில்வாகனம் தம்பதியரின் அன்பு ம்கனும், யானகிதேவியின் பாசமிகு கணவரும், நிமலினி (USA), இந்திரஜித் (அவுஸ்ரேலியா), ஜெயகரன் (USA), உமாகாந்தன் (USA) ஆகியோரின் பாசமிகு தந்தையும், Dr. தனஞ்சஜன், Dr. சிவறாஜினி, ஜீதா ஆகியோரின் மாமனாரும், Dr. விறிஜன், Dr. அக்ஷயா, ஆரவி, சந்தியா, லவன், யாழினி ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற சிவமணி மற்றும் சிவலக்சுமி (மானிப்பாய்) ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.10.2023) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி மாயனத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
077 082 2707
077 585 1355

**இல.26, கல்லூரி வீதி,**
**மானிப்பாய்.**

(cs.52365) (N.1)

# மரண அறிவித்தல்

தோற்றம்
15 • 05 • 1927



மறைவு
02 • 10 • 2023

## திருமதி கிருஸ்ணபிள்ளை தனேஸ்வரி

வைத்தியசாலை வீதி, சங்கானையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி கிருஸ்ணபிள்ளை தனேஸ்வரி கடந்த (02.10.2023) திங்கட்கிழமை அதிகாலை 02.00 மணிக்கு இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வெற்றிவேலு நாகம்மா தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற செல்லப்பா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற செல்லப்பா கிருஸ்ணபிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சபாரட்ணம், மங்கயற்கரசி, மகேந்திரம், சிவபாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற தெய்வானப்பிள்ளை, சோதிப்பிள்ளை, சோமசுந்தரம், பொன்னையா ஆகியோரின் மைத்துனியும், சிவபாலன், சிவராசா, சிவயோகநாதன், சிவகுருநாதன், சிவயோகேஸ்வரி, ஆகியோரின் அன்புத் தாயாரும், ஞானலதா, காலஞ்சென்ற புஸ்பவதி, ஞானேஸ்வரி, மனோகரி, சிவகுமார் ஆகியோரின் அன்பு மாமியாரும், சிவசீலன் + லக்சனா, சிவயனன் +சுகனியா, லக்சுமி, சிவதர்ஷனா + காந்தன், குமுதா+ சுதன், விஸ்வாகரன் + பிரியங்கா, சிவசெந்தூரன் + றனு, சிவப்பிரியா + பிருந்தன், சிவநித்தியா + சுகேன், சிவதாரணி + ஓளை, பிரசன்னா, சிவரூபன் + டிலானி, சிந்தியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், வர்சினி, இசானா, கரிணி, அஸ்வி, விசாரா, கவின், அகின், லிப்திக்கா, விரோனிகா, அஸ்மிதா, ஆதினி, ஆதரா, அனிக்கா, அனன்யா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.10.2023) வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ஆஸ்பத்திரி வீதி,**
**சங்கானை.**

(cs.52381) (N.1)

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுக்குடியிருப்பு பிரதேசசபை, புதுக்குடியிருப்பு.
# கேள்வி அறிவித்தல் - 2024.

கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்ட நிலையங்களை 01.01.2024 இலிருந்து 31.12.2024 வரையான காலப்பகுதிக்கு நடாத்துவதற்காக குத்தகைக்கேள்விகள் கீழ் காட்டப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைய கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கும் காலம் :- 05.10.2023 முற்பகல் 9.00 மணி தொடக்கம் 17.10.2023 பிற்பகல் 14.00 மணிவரை (அலுவலகநாட்களில் மட்டும்)

கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி :- 17.10.2023 பி.ப 02.00 மணிவரை

கேள்வி திறக்கப்படும் திகதி :- 17.10.2023 பி.ப 02.00 மணி

| இல | குத்தகை வகை | மீளளிக்க முடியாத கேள்விப்படிவ கட்டணம் (NBT,VAT நீங்கலாக) | மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்புப்பணம் (NBT,VAT நீங்கலாக) | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த கேள்வித்தொகை (NBT,VAT நீங்கலாக) |
|---|---|---|---|---|
| | **புதுக்குடியிருப்பு உப அலுவலகம்.** | | | |
| 1 | புதுக்குடியிருப்பு பொதுச்சந்தையும் துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையமும் (விற்பனை நிலையங்கள் நீங்கலாக) | 2,000.00 | 319,000.00 | 6,380,000.00 |
| 2 | புதுக்குடியிருப்பு பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 2,000.00 | 99,000.00 | 1,982,200.00 |
| 3 | புதுக்குடியிருப்பு பொதுச்சந்தை கோழி இறைச்சிக்கடை | 2,000.00 | 75,900.00 | 1,518,000.00 |
| 4 | உடையார்கட்டு பொதுச்சந்தை (விற்பனை நிலையங்கள் நீங்கலாக) | 2,000.00 | 21,000.00 | 413,600.00 |
| 5 | உடையார்கட்டு பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 2,000.00 | 18,000.00 | 366,850.00 |
| 6 | உடையார்கட்டு பொதுச்சந்தை கோழி இறைச்சிக்கடை | 2,000.00 | 3,000.00 | 56,428.20 |
| 7 | விசுவமடு பொதுச்சந்தை (விற்பனை நிலையங்கள் நீங்கலாக) | 2,000.00 | 83,000.00 | 1,662,760.00 |
| 8 | விசுவமடு பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 2,000.00 | 32,000.00 | 633,600.00 |
| 9 | விசுவமடு பொதுச்சந்தை கோழி இறைச்சிக்கடை | 2,000.00 | 42,000.00 | 847,000.00 |
| 10 | இரணைப்பாலை மாட்டிறைச்சிக்கடை | 2,000.00 | 23,000.00 | 451,000.00 |
| 11 | மந்துவில் பொதுச்சந்தை | 2,000.00 | 2,000.00 | 29,700.00 |
| 12 | மந்துவில் மாட்டிறைச்சிக்கடை (மட்டுப்படுத்தப்பட்டுள்ளது) | 2,000.00 | 2,000.00 | 33,550.00 |
| 13 | மந்துவில் கோழி இறைச்சிக்கடை (மட்டுப்படுத்தப்பட்டுள்ளது) | 2,000.00 | 2,000.00 | 16,929.00 |
| 14 | புதுக்குடியிருப்பு பொதுச்சந்தை கருவாட்டுக்கடை(இல-01) | 2,000.00 | 2,000.00 | 36,300.00 |
| 15 | புதுக்குடியிருப்பு பொதுச்சந்தை கருவாட்டுக்கடைஇல-02) | 2,000.00 | 2,000.00 | 25,920.00 |
| 16 | புதுக்குடியிருப்பு பொதுச்சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 2,000.00 | 7,000.00 | 146,300.00 |
| 17 | புதுக்குடியிருப்பு சிறுவர் பூங்கா | 2,000.00 | 2,000.00 | 27,500.00 |
| 18 | புதுக்குடியிருப்பு நகர்ப்பகுதி பொது மலசலகூடம் | 2,000.00 | 2,000.00 | 14,727.60 |
| 19 | கைவேலி மாட்டிறைச்சிக் கடை | 2,000.00 | 50,000.00 | 1,000,000.00 |
| 20 | கைவேலி கோழி இறைச்சிக்கடை | 2,000.00 | 35,000.00 | 700,000.00 |
| 21 | கைவேலி பன்றி இறைச்சிக்கடை( வளர்ப்புப் பன்றி) | 2,000.00 | 20,000.00 | 400,000.00 |
| | **ஒட்டுசுட்டான் உப அலுவலகம்.** | | | |
| 1 | கற்சிலைமடு பொதுச்சந்தை (விற்பனை நிலையங்கள் நீங்கலாக) | 2,000.00 | 2,000.00 | 48,400.00 |
| 2 | கற்சிலைமடு பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 2,000.00 | 3,000.00 | 58,300.00 |
| 3 | முத்துஐயன்கட்டு இடதுகரை பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 2,000.00 | 2,000.00 | 46,200.00 |
| 4 | ஒட்டுசுட்டான் பொதுச்சந்தை (விற்பனை நிலையங்கள் நீங்கலாக) | 2,000.00 | 31,000.00 | 616,000.00 |
| 5 | ஒட்டுசுட்டான் பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 2,000.00 | 19,000.00 | 385,000.00 |
| 6 | ஒட்டுசுட்டான் பொதுச்சந்தை கோழி இறைச்சிக்கடை | 2,000.00 | 26,000.00 | 510,730.00 |
| 7 | கற்சிலைமடு கோழி இறைச்சிக்கடை | 2,000.00 | 6,000.00 | 125,388.00 |
| 8 | ஒட்டுசுட்டான் கருவாட்டுக்கடை (இல-01) | 2,000.00 | 2,000.00 | 2,530.00 |
| 9 | ஒட்டுசுட்டான் ஆட்டிறைச்சிக் கடை | 2,000.00 | 2,000.00 | 22,090.50 |
| | **ஒலுமடு உப அலுவலகம்.** | | | |
| 1 | திருமுறிகண்டி கட்டன கழிப்பறை | 2,000.00 | 4,000.00 | 77,000.00 |
| 2 | மாங்குளம் கோழி இறைச்சிக்கடை | 2,000.00 | 9,000.00 | 173,800.00 |
| 3 | மாங்குளம் பொதுச்சந்தை | 2,000.00 | 17,000.00 | 333,300.00 |
| 4 | மாங்குளம் மாட்டிறைச்சிகடை | 2,000.00 | 2,000.00 | 30,800.00 |
| 5 | மாங்குளம் கருவாட்டுக்கடை | 2,000.00 | 2,000.00 | 2,268.00 |

**நிபந்தனைகள்.**

1. கேள்விப்பத்திரங்களின் இரு பிரதிகளும் **தலைவர், பிராந்திய பெறுகைக் குழு, புதுக்குடியிருப்பு பிரதேசசபை, புதுக்குடியிருப்பு** என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் **கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு** பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடுதல் வேண்டும். இரு கேள்விகளும் கேள்வி திறத்தல் நேரத்திற்கு முன்பு கிடைக்கப்பெறல் வேண்டும்.
2. எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரமுண்டு. ஏற்றுக் கொள்ளக்கூடிய குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்வி வைப்புப்பணம் மீளளிக்கப்பட மாட்டாது. சித்திகர கேள்விதாரர் கேள்வித் தொகையின் $^{1}/_{3}$ பகுதியை **2023.10.23 ஆம்** திகதி பி.ப 2.00 மணிக்கு முன்னர் குத்தகை வைப்பாக செலுத்தி சபையுடன் ஒப்பந்தமொன்றினை செய்து கொள்ள வேண்டும். மிகுதித் தொகையினை 6 சமபங்குப் படி தை தொடக்கம் ஆனி வரையான காலப்பகுதிக்குள் அவ் மாதம் இறுதித் திகதிக்கு முன்னைய வேலைநாட்களில் செலுத்த வேண்டும். தவறுமிடத்து மாதக் கட்டணத் தொகையின் 10 வீதம் தண்டமும் மேலதிகமாக அறவிடப்படும். மேலதிக விபரத்தினை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
3. கேள்விப்பத்திரத்தினை பெற விரும்புவோர் **பிரதேசசபை எல்லைக்குள்** நிரந்தர வதிவிடத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும். அத்துடன் விண்ணப்பத்துடன் **தேசிய அடையாள அட்டையின் உறுதிப்படுத்திய பிரதி அல்லது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடிய ஏதேனும் ஓர் ஆவணத்தின் உறுதிப்படுத்திய பிரதி , தாம் வதியும் கிராம சேவையாளரிடம் பெற்றுக்கொள்ளப்பட்ட வதிவிடத்தின் வதிவிட சான்றிதழ் மூலப்பிரதி** ஆகியவற்றினை சமர்ப்பித்தல் வேண்டும்.
4. வியாபாரம் நடைபெறும் போது பொதுமக்கள் இருபக்கமும் நிறையினை அவதானிக்கக்கூடிய தராசினை பயன்படுத்தல் வேண்டும்.
5. பொதுச்சந்தையை அண்மித்துள்ள இடங்களில் நடை பாதை வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுவோரிடம் கட்டணம் அறவிடுவதன் மூலம் வியாபார நடவடிக்கையை ஊக்குவித்தல் கூடாது. அத்துடன் வியாபாரம் செய்வதற்கு அனுமதியளித்தல் கூடாது சபையின் அறிவுறுத்தல்களை பின்பற்றல் வேண்டும்.
6. புதுக்குடியிருப்பு மாட்டிறைச்சிக்கடையினை குத்தகைக்குப் பெற்றுக் கொள்பவருக்கு மாத்திரம் மந்துவில் மாட்டிறைச்சிக் கடைக்கான குத்தகை கேள்விப் படிவமும், புதுக்குடியிருப்பு கோழியிறைச்சிக் கடையினை பெற்றுக்கொள்பவருக்கு மாத்திரம் மந்துவில் கோழியிறைச்சிக் கடைக்கான குத்தகைக் கேள்விப் பத்திரமும் வழங்கப்படும். எவ்வாறாயினும் புதுக்குடியிருப்பு மாட்டிறைச்சிக்கடை, கோழியிறைச்சிக் கடைகளின் சித்தியாளர்களுக்கே மந்துவில் மாட்டிறைச்சிக்கடை, கோழியிறைச்சிக்கடை ஆகியவை வழங்கப்படும்.
7. பொதுச்சந்தையை குத்தகைக்கு பெறுபவர் சந்தைக்கு வரும் சந்தைப் பொருட்களின் மொத்தப் பெறுமதியின் 4% கட்டணத்திற்கு மேலதிகமாக அறவிடமுடியாது. மீன், மரக்கறிச்சந்தை வியாபாரிகளிடம் (புதுக்குடியிருப்பு, விசுவமடு பொதுச்சந்தைகள் தவிர்ந்த) இடத்திற்கு ஒருநாளிற்கு (4'X4') ரூபா 40.00க்கு மேற்படாமலும் கட்டணம் (இடவாடகையாக) அறவிடலாம். இதற்கு மேலதிகமாக எந்தவித கட்டணமும் அறவிடக்கூடாது. சந்தையின் சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தில் பாதுகாக்கப்படும் துவிச்சக்கர வண்டி ஒவ்வொன்றிற்கும் ரூபா 10.00ம் மோட்டார் சைக்கிள் , முச்சக்கர வண்டிகள், ஒவ்வொன்றிற்கும் ரூபா 20.00ம் மற்றும் ஏனைய வாகனங்களுக்கு 50.00ம் அறவிடலாம். அதற்கு மேலதிகமாக எந்தவித கட்டணமும் அறவிடக்கூடாது.
8. புதுக்குடியிருப்பு பொதுச்சந்தையினைக் குத்தகைக்கு எடுப்பவர்கள் (நாளொன்றிற்கு) பழக்கடை, வெற்றிலைக் கடைகளுக்கு ரூபா 100.00ற்கு மேற்படாமலும் மரக்கறிக் கடைகளுக்கு ரூபா 110.00ற்கு மேற்படாமலும், விசுவமடு சந்தைக் கடைகளுக்கு (நாளொன்றிற்கு) ரூபா 100.00ற்கு மேற்படாமலும் (இட வாடகையாக) அறவிடமுடியும்.
9. பொதுச் சந்தையில் மரக்கறி, கடலுணவு வகைகளின் கொள்விலை, விற்பனைவிலை என்பன காட்சிப்படுத்தல் வேண்டும்.
10. மரக்கறி, கடலுணவு மற்றும் இறைச்சிக்கடைகளில் [illegible] வேண்டும்.

தொடர்ச்சி.08

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

தொடர்ச்சி....

# புதுக்குடியிருப்பு பிரதேசசபை, புதுக்குடியிருப்பு.
## கேள்வி அறிவித்தல் - 2024.

11. திருமுறிகண்டி பொது மலசலகூடத்தினை குத்தகைக்கு எடுப்பவர்கள் சபையினால் விதிக்கப்படும் கட்டணங்களுக்கு மேல் வரியோ அல்லது கட்டணமோ அறவிடக்கூடாது. (கட்டணத்திற்கான பற்றுச்சீட்டு வழங்கப்பட வேண்டும்.)
12. திருமுறிகண்டி கழிப்பறையினை குத்தகைக்கு எடுப்பவர் ஒவ்வொரு வேளையும் தூய்மையாகவும் செம்மையாகவும் வைத்திருக்க வேண்டும் அத்துடன் போதிய மின்சார வசதிகள் ஏற்படுத்தி இருக்க வேண்டும்.
13. இறைச்சிக் கடைகளின் வெளிப்புறம், உட்புறம் தூய்மையாக பேணப்பட வேண்டும்.
14. இறைச்சிக்கடைகளை குத்தகைக்கு எடுப்பவர்கள் கடையினது கழிவுகளை தாங்களே அகற்ற வேண்டும். அத்துடன் புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான் கொல்களத்தினையே பயன்படுத்துதல் வேண்டும்.
15. இறைச்சி வகைகளுக்கான கட்டுப்பாட்டு விலையானது அரசாங்கத்தினால் தீர்மானிக்கப்பட்ட வர்த்தமானி, சுற்றுநிருபங்களுக்கு அமைவாகவும், சபையினால் தீர்மானத்திற்கு அமைவாகவும் விற்பனை செய்தல் வேண்டும்.
16. இறைச்சிக்கடைகள் மற்றும் கருவாட்டுகடைகளினை குத்தகைக்கு பெறும் குத்தகைதாரர்கள் மாதமொன்றிற்கு ரூபா 500.00 இனை கடை வாடகையாக சபைக்கு செலுத்துதல் வேண்டும்.
17. கோழி இறைச்சிக்கடை குத்தகைக்காரர்கள் கோழிகளினை உயிருடன் காட்சிப்படுத்தி விற்பனை செய்தல் வேண்டும்.
18. கொல்களத்தில் அறுக்கப்படுவதற்கான விலங்குகள் 24 மணித்தியாலங்களுக்கு முன்னர் பொது மக்களின் பார்வைக்காக சபையால் ஒதுக்கப்பட்ட இடத்தில் கட்டப்பட்டு உரிய அதிகாரிகள் முன்னிலையிலேயே கொல்களத்தில் அறுக்கப்பட வேண்டும்.
19. சந்தை வளவின் உட்புறமாக உள்ள கடைகளுக்கு சந்தைக் குத்தகையாளர் எந்த விதமான வரியும் அறவிடக் கூடாது.
20. கேள்விப்பத்திரங்களைப் பெறுபவர்கள் புதுக்குடியிருப்பு பிரதேசசபையில் எவ்வித நிலுவைக் கட்டணங்களையும் முன்னைய காலங்களில், நடப்பு ஆண்டில் செலுத்தத் தவறியவர்களாக அல்லது கறுப்பு நிரல் பட்டியலில் சேர்க்கப்பட்டவர்களாக இருந்தால் கேள்வியில் சித்தி பெற்றாலும் அவர்களுக்கு வழங்கப்படமாட்டாது.
21. கொல்களத்தில் அறுக்கப்படும் ஆண், பெண் மாடுகள், எருமை மாடுகள், ஆடுகள் கிராம சேவகரினால் உறுதிப்படுத்தப்பட்ட உரிமையாளரின் கடிதத்துடனேயே கொல்களத்திற்கு வெட்டுவதற்கு கொண்டுவர முடியும். அதற்கு மேலதிகமாக பெண் மாடுகள், ஆடுகளுக்கு மாத்திரம் இனப்பெருக்கத்திற்கு தகுதியற்றது என பிரதேச கால்நடை வைத்தியரினால் வழங்கப்பட்ட சான்றிதழும் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.
22. சந்தைகள் நடைபெறும் இடங்கள் தேவை ஏற்படின் மாற்றப்படும், பொது விதிகள் தவிர்ந்த விசேட சலுகைகள் சபை தீர்மானத்திற்கு அமைவாகவே நடைமுறைப்படுத்தப்படும், தாங்கள் சட்டவரையறைகளுக்கும் சபைக்கும் கட்டுப்பட்டு நடத்தல் வேண்டும்.
23. அரசினால், பிரதேச சபையினால் தொற்று நோய்கள் சம்பந்தமாக அறிவுறுத்தப்படும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி நடத்தல் வேண்டும்.
24. மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் அலுவலகத்தில் நேரடியாக அல்லது தொலைபேசி மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**புதுக்குடியிருப்பு பிரதேசசபை,**
**புதுக்குடியிருப்பு.**
2023.10.05.
தொலைபேசி இல:- 0212291023 **email-pkipsmullai@gmail.com.**

# INVITATION FOR BID (2023/14)
## Regional Directorate of Health Service, Jaffna.

1. The Chairman, Regional Procurement Committee, on behalf of the Regional Directorate of Health Services, Jaffna, invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below.
2. Bidding will be conducted through **National Competitive Bidding Procedure** (NCB).

***"Bidding will be conducted through National Competitive Bidding in Public Finance Circular No. 04/2016 (iii) and its amendments" Public Finance Circulars No 03/2020 and 03/2020(i) dated, 09.10.2020 and 11.01.2021 respectively will also be adopted.***

3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of building construction for grade mentioned in the table below.
4. Qualification' requirements are indicated in section 4 of the Bidding document. Additional details are provided in the Schedule (Section 5) for SBD 3 documents
5. Interested bidders may obtain further information from **address given below in 6** and inspect the bidding documents at the same place on any working days from 09.00 hrs to 15.00 hrs.
6. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Regional Directorate of Health Services,No 572/3 Hospital Road Jaffna. (T.P:021 222 4966, Fax: 021 222 9971) from 9.00 a.m. to 15.00 p.m. during the period mentioned in the table, upon payment of non-refundable fees as mentioned in the table.** The method of payment should be by cash.
7. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the **Chairman, Regional Procurement Committee, Regional Directorate of Health Services, No 572/3 Hospital Road, Jaffna** on or before 10.30 a.m at the date mentioned in the table below. Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
8. Pre-Bid Conference will be held at Conference Hall, Regional Directorate of Health Services, 572/3 Hospital Road, Jaffna on commencing at 2.30 P.M on the date mentioned in the table.
9. Bids shall be accompanied by a Bid security as per the information given in the Table.

| CATEGORY I | Document Issuing/Purchasing Period | From 05.10.2023 until 18.10.2023 |
|---|---|---|
| | Pre-Bid Conference | At 2.30 P.M on 12.10.2023 |
| | Closing and Opening of Bids | At 10.30 A.M on 19.10.2023 |

| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period | Grade Required | Non-Refundable Fees | Required Bid Security | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | Security Amount | Validity Period |
| NP/04/41/2023/Unicef/W/33 | Repair and Renovation of PHC Building at Neervelly Kopay | 1.10 | 71 Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 12,000.00 | Till 04.01.2024 |
| NP/04/41/2023/PSDG/W/05 | Construction of Covered way at Base Hospital Point Pedro,Jaffna. | 6.3 | 112 Days | C8, C7 and C6 (Buildings) | 3,500.00 | 63,000.00 | Till 01.02.2024 |

**Chairman**
**Regional Procurement Committee**
**Regional Directorate of Health Service,**
**Jaffna.**

(cr 39908) (N-1)


## உதவி ஆசிரியர் தேவை

தரம் - 5 இல் கல்வி பயிலும் மாணவர்க்கு பாடசாலையில் கடமையாற்ற உதவி ஆசிரியர் தேவை. (பாடசாலை நேரம்: 7.15 - 1.30 வரை) O/L or A/L படித்தவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு எண்: **076 9744 390**

## வேலையாட்கள் தேவை

யாழ். நகரில் இயங்கும் யாழ் - கொழும்பு அதிசொகுசு பேரூந்து சேவையின் ஆசன பதிவகத்திற்கு யாழ். நகரை அண்டிய ஆண்கள் தேவைப்படுகின்றனர்.

தொடர்பு: **076 009 4946**


# தாக்கப்பட்டார் பொலிஸ் அலுவலர்

கிளிநொச்சி, ஒக். 5

விசாரணைக்கு பொலிஸ் நிலையம் வருமாறு சந்தேகநபரை அழைத்த பொலிஸ் அதிகாரி மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. காயமடைந்த பொலிஸ் அதிகாரி கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இராமநாதபுரம் பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் பொலிஸ் அலுவலர் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை புதுக்காட்டுப் பகுதிக்குச் சென்றபோதே சந்தேகநபரால் இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ஒ-113)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## நானாட்டான் பகுதி ப.நோ.கூ.சங்கம்
## பிரதான வீதி, முருங்கன்
## பதவி வெற்றிடம் - எழுதுனர்
## குறியீட்டு இலக்கம் 302/14

மேற் குறிப்பிடப்பட்ட பதவிக்கு மன்னார் மாவட்டத்தில் நிரந்தரமாக வதிபவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

**01. சம்பள அளவுத்திட்டம் :**
208/14 17900.00 – 155X10 – 265X10 – 21100.00
(அத்துடன் கூ.ஊ.ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட படிகள்)

**தகைமைகள் :**

1. கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழு சம்பளத்திட்டம் 15ல் பதவியில் எழுதுனர் / காசாளர்/ கணனிப்பக்க உருவாக்குனர் பதவி ஒன்றில் ஆகக்குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்

**அல்லது**

2. கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழு சம்பளத் திட்டம் 16ல் பதவியில் எழுதுனர்/ காசாளர்/ கணனிப்பக்க உருவாக்குனர் பதவி ஒன்றில் ஆகக்குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்

**அல்லது**

3. கூட்டுறவு ஊழியர் சாதாரண தரப்பரீட்சையில் சித்தி/ க.பொ.த.சாதாரண தரப்பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது தமிழ்மொழி. கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி

**03. வயது :** 18 வயது தொடக்கம் 45 வயதிற்குட் பட்டவர்களாக இருத்தல் வேண்டும்

**04. பொது :** தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரி சம்பளத்தில் 5 மடங்கு ரொக்க பிணையாக செலுத்துதல் வேண்டும்

சங்கத்தில் பெறப்பட்ட விண்ணப்ப படிவத்தினை பூர்த்தி செய்து சான்றிதழ்களின் பிரதியுடன் பொது முகாமையாளர் நானாட்டான் பகுதி ப.நோ.கூ.சங்கம் பிரதான வீதி முருங்கன் என்னும் விலாசத்திற்கு எதிர்வரும் 20.10.2023 திகதிக்கு முன்னர் அலுவலகத்தில் கிடைக்கக்கூடயதாக அனுப்பிவைக்கப் படல் வேண்டும்

**பொது முகாமையாளர்**
**நானாட்டான் பகுதி ப.நோ.கூ. சங்கம்.**
**முருங்கன்**

(cs 50552 A) (N-1)

## நானாட்டான் பகுதி.ப.நோ.கூ.சங்கம்
## பிரதான வீதி, முருங்கன்
## பதவி வெற்றிடம் - களஞ்சிய (கிளை) முகாமையாளர்
## குறியீட்டு இலக்கம் 208/14

மேற் குறிப்பிடப்பட்ட பதவிக்கு மன்னார் மாவட்டத்தில் நிரந்தரமாக வதிபவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

**01. சம்பள அளவுத்திட்டம் :**
208/14 17900.00 – 155X10 – 265X10 – 21100.00
(அத்துடன் கூ.ஊ.ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட படிகள்)

**02. தகைமைகள் :**

1. கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழு சம்பளத்திட்டம் 15ல் சம்மந்தப்பட்ட துறையிலான பதவி ஒன்றில் ஆகக்குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்

**அல்லது**

2. கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழு சம்பளத்திட்டம் 16ல் சம்மந்தப்பட்ட துறையிலான பதவி ஒன்றில் ஆகக்குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்

**அல்லது**

3. கூட்டுறவு ஊழியர் சாதாரண தரப்பரீட்சையில் சித்தி/ க.பொ.த.சாதாரண தரப்பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது தமிழ்மொழி. கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி

**03. வயது :** 18 வயது தொடக்கம் 45 வயதிற்குட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்

**04. பொது :** தெரிவு செய்யப்படும் விண்ணப் பதாரி ரொக்க பிணையாக சம்பளத்தின் 5 மடங்கு செலுத்துவதுடன் ஆதனப்பிணையும் செலுத்துதல் வேண்டும்

சங்கத்தில் பெறப்பட்ட விண்ணப்ப படிவத்தினை பூர்த்தி செய்து சான்றிதழ்களின் பிரதியுடன் பொது முகாமையாளர் நானாட் டான் பகுதி ப.நோ.கூ.சங்கம் பிரதான வீதி முருங்கன் என்னும் விலாசத்திற்கு எதிர்வரும் 20.10.2023 திகதிக்கு முன்னர் அலுவலகத்தில் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும்

**பொது முகாமையாளர்**
**நானாட்டான் பகுதி ப.நோ.கூ. சங்கம்.**
**முருங்கன்**

(cs 50552 B) (N-1)

## மரண அறிவித்தல்

தோற்றம் 11 . 10 . 1943



மறைவு 04 . 10 . 2023

### சோமசேகரசர்மா கௌரிமனோகரி
### (கௌரி அம்மா)

நுனாவிலை பிறப்பிடமாகவும் சாவகச்சேரி சிவன்கோவில் வீதியை வசிப்பிடமாகக் கொண்ட காலஞ்சென்ற சோமசேகரசர்மா அவர்களின் மனைவி கௌரிமனோகரி (மனோகரி அம்மா) அவர்கள் நேற்று (04.10.2023) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் ஜெயபால். முரளிதர் ஆகியோரின் தாயாரும் பாலரஞ்சினி (மாத்தளை). சாந்தினி (தாவடி) ஆகியோரின் மாமியாரும் சுபரஜன். வர்ஷா ஆகியோரின் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியசர்மா. வரதராஜசர்மா மற்றும் உமாபதி சர்மா (லண்டன்) காலஞ்சென்றவர்களான யோகேஸ்வரி. இராஜகோபால சர்மா மற்றும் மாலினி அம்மா. விஜயா அம்மா. காலஞ்சென்ற ரமணி அம்மா ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.10.2023) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**ஜெயபால் - 077 0040672**
**முரளிதர் - 075 0197989**

**சிவன் கோவில் வீதி,**
**சாவகச்சேரி.**

CR40711 M-1

## நானாட்டான் பகுதி ப.நோ.கூ.சங்கம்
## பிரதான வீதி, முருங்கன்
## பதவி வெற்றிடம் -கணக்கு பதிவாளர்
## குறியீட்டு இலக்கம் 215/11

மேற் குறிப்பிடப்பட்ட பதவிக்கு மன்னார் மாவட்டத்தில் நிரந்தரமாக வதிபவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

**01. சம்பள அளவுத்திட்டம் :**
215/11 19280.00 – 190X10 – 210X10 – 23280.00
(அத்துடன் கூ.ஊ.ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட படிகள்)

**02. தகைமைகள் :**

1. கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழு சம்பளத்திட்டம் 12ல் பதவியில் கணக்கு பதிவாளர்/வெளிக்களஉத்தியோகஸ்தர்/ எழுதுனர்/காசாளர் பதவியில் ஆகக் குறைந்தது 02 வருடத்திற்கு குறையாத அனுபவம்/ கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழு சம்பளத்திட்டம் 13வது பதவியில் கணக்கு பதிவாளர் / வெளிக்கள உத்தியோகஸ்தர்/ எழுதுனர்/ காசாளர் பதவியில் ஆகக்குறைந்தது 04 வருடத்திற்கு குறையாத அனுபவம்.

**அல்லது**

2. இலங்கை தொழில்நுட்பக் கல்லூரியின் கணக்கியலிலான டிப்ளோமாவுடன்/ இதற்கு சமமான தகைமை / மாகாண கூட்டுறவு பயிற்சி நிறுவனத்தினால் / தேசிய கூட்டுறவு பயிற்சி நிறுவனத்தினால் (NICD) நடத்தப்பட்ட கூட்டுறவு டிப்ளோமா பரீட்சை சித்தி

**அல்லது**

3. கூட்டுறவு ஊழியர் தராதரப்பத்திரம் (உயர் தரம்) சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் / அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைதொழில் நிறுவனமொன்றில் கணக்கியல் துறை பதவியில் ஆகக்குறைந்தது 01 ஆண்டு அனுபவம் / க.பொ.த (உயர்தரம்) பரீட்சையில் கணக்கியல் உட்பட 03பாடங்களில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனமொன்றில்/ அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனமொன்றில் ஆகக்குறைந்தது 02 வருட கால அனுபவம்

**03. வயது :** 18 வயது தொடக்கம் 45 வயதிற்குட் பட்டவர்களாக இருத்தல் வேண்டும்

**04. பொது :** தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரி ரொக்க பிணையாக சம்பளத்தின் 5 மடங்கு செலுத்துதல் வேண்டும்

சங்கத்தில் பெறப்பட்ட விண்ணப்பப் படிவத்தினை பூர்த்தி செய்து சான்றிதழ்களின் பிரதியுடன் பொது முகாமையாளர் நானாட்டான் பகுதி ப.நோ.கூ.சங்கம் பிரதான வீதி முருங்கன் என்னும் விலாசத்திற்கு எதிர்வரும் 20.10.2023 திகதிக்கு முன்னர் அலுவலகத்தில் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும்

**பொது முகாமையாளர்**
**நானாட்டான் பகுதி ப.நோ.கூ.சங்கம்.**
**முருங்கன்.**

(es.52383) (N.1)

# மின்விசிறியில் சிக்கி உயிரிழந்த மாணவன்

*வகுப்பறைக்குள் நிகழ்ந்த விபரீதம்*

கொழும்பு, ஒக்.5

வகுப்பறைக்குள் இடம்பெற்ற திடீர் விபத்தில் காயமடைந்த மாணவன் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் புசல்லாவையில் நேற்று இடம்பெற்றுள்ளது. கண்டி. புசல்லாவை இந்துதேசியக்கல்லூரியில் தரம்-10 இல் கல்வி பயிலும், டெல்டா வடக்குப் பிரிவுத் தோட்டத்தைச் சேர்ந்த ராஜரட்ணம் சதுர்சன் (வயது-15) என்ற மாணவரே உயிரிழந்துள்ளார்.

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு பாடசாலை மைதானத்தில் நேற்று சிறுவர் தின நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன. நிகழ்வுகள் முடிவடைந்த பின்னர் பகல் 1.30 மணியளவில் வகுப்பறைக்குத் திரும்பிய குறித்த மாணவர், மேசைமீது ஏறி. பாய்ந்து விளையாடியுள்ளார். அப்போது வகுப்பறையில் இயங்கிக்கொண்டிருந்த மின் விசிறியில் அவரின் தலைப் பகுதிபட்டு காயம் ஏற்பட்டுள்ளது.

அதையடுத்து மாணவன் மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்டார். எனினும் சிகிச்சை பயனின்றி மாணவன் உயிரிழந்துள்ளார். அதிகளவுகுருதிப்போக்கே உயிரிழப்புக்குக் காரணம் என்று கூறப்படுகின்றது. சம்பவம் தொடர்பில் புசல்லாவை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ-44)

# 2கிலோ கஞ்சாவுடன் 49வயது பெண் கைது

மன்னார், ஒக். 5

மன்னார் பேசாலையில் 2 கிலோ கேரளக் கஞ்சாவுடன் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மன்னார் பேசாலை இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் போதே மேற்படி சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட சந்தேகநபருக்கு 49 வயது என்றும் அவரிடம் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-213)

# குருதிக்கொடை நிகழ்வு இன்று

யாழ்ப்பாணம், ஒக்.5

யாழ். மாவட்டத் திரிசாரணர் குழாமால் ஏழாவது தடவையாக நடத்தப்படும் குருதிக் கொடை நிகழ்வு இன்று வியாழக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை கொட்டடி முத்தமிழ் வீதியில் அமைந்துள்ள முன்பள்ளியில் நடைபெறவுள்ளது.

குருதிக் கொடை நிகழ்வில் அனைவரும் கலந்து கொண்டு உயிர்காக்கும் உன்னத பணிக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (எ-66)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாடகைக்கு உண்டு

**பழைய நம்பர் 179, சிவன் பண்ணை வீதி,**
**யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள**
**3 ஸ்ரோர்ஸ் (40 X 12), 2 கடை (30 X 15)**
பல்கலைக்கழக மாணவர்களுக்கான அறைகள் (ஆண்கள்) அபிகொலிடே விழாக்கு முன்பாக வாடகைக்கு உண்டு. (CCTV கமரா உண்டு)
பல்கலைக்கழக மாணவர்களுக்கு விசேட விலைக்கழிவு உண்டு.

(cs.523669) (N.1)

# 077 863 1768


## அறிவித்தல்

ஆனைக்கோட்டை கரைப்பிரான் பிள்ளையார் கோவிலில் திருப்பணி வேலைகள் நடைபெற்று வருவதை அறிந்த சிலர் ஆலயத்தின் பெயரால் போலியான பற்றுச் சீட்டுக்களை தயாரித்து நிதி சேகரித்து வருவதாக எமக்கு தகவல் கிடைத்துள்ளது. ஆலயத்தின் பெயரால் எவரும் நிதி சேர்க்க நியமிக்கப்படவில்லை என்பதை இதன்மூலம் அறியத்தருகின்றோம். நிதி வழங்க விரும்புவோர் ஆலயத்தில் ஆதீனகர்த்தாவிடம் ஒப்படைக்கவும்.

**ஆதீன கர்த்தா**
**சோம சிவகுமாரக்குருக்கள்**

(cs.52380) (N.1)

# வடமராட்சியில் கண்நோய் பரவல்

யாழ். மாவட்டத்தில் நிலவிவரும் வழமைக்கு மாறான கடும் காற்றுடனான காலநிலை காரணமாக வடமராட்சி மற்றும் வலிகாமத்தின் சில இடங்களில் பாடசாலை மாணவர்கள் மத்தியில் தற்போது கண் நோய் பரவி வருவது அவதானிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாகப் பாடசாலை மாணவர்கள் மத்தியில் வேகமாகப் பரவிவரும் இந்தத் தொற்றுநோய் தொடர்பில் அவதானமாகவிருப்பதுடன் மேற்கண்ட அறிகுறிகள் தென்படும் பட்சத்தில் அருகிலுள்ள மருத்துவமனைகளை நாடுமாறும் சுகாதாரப் பிரிவினர் அறிவுறுத்தியுள்ளனர். (ம-66)

## மரண அறிவித்தல்



### சேர்த்து வாசிக்கவும்

**சோமசேகரசர்மா கௌரி மனோகரி**

சோமசேகரசர்மா கௌரிமனோகரியின் சகோதரியான சாந்த நாயகி அம்மா

**தகவல்: குடும்பத்தினர்.**

(CR 40712)A-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 24 • 04 • 1934



மறைவு 04 • 10 • 2023

# வாரித்தம்பி மகாதேவி

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வாரித்தம்பி மகாதேவி நேற்று (04.10.2023) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சின்னத்தம்பி வாரித்தம்பியின் (ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியர்) அன்பு மனைவியும், விஜிதாவின் அன்புத் தாயாரும், சத்தியசீலனின் அன்பு மாமியும் காலஞ்சென்ற லீலாவதி மற்றும் இராசசிங்கம், சுபத்திரா, காலஞ்சென்ற வனஜா ஆகியோரின் சிறியதாயாரும், இரத்தினாவதி, இன்பராஜன், இரட்ணராஜன், ஜெயராஜன் ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.10.2023) வியாழக்கிழமை திருநெல்வேலியில் உள்ள அவரது இல்லத்தில் முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**120/2, சின்னமுத்துத்தம்பி முன் ஒழுங்கை,**
**ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்**
**குடும்பத்தினர்**
**074 377 0813**

(CR52376) (N.1)



## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியர்
**திரு. கந்தசாமி மணிவண்ணன்**
அவர்களின் அன்புத் தந்தை


### வேலுப்பிள்ளை கந்தசாமி

அவர்களின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதுடன் அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.

**ஆசிரியர் நலன்புரிக்கழகம், யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி**

## மரண அறிவித்தல்

பிறப்பு 01 • 11 • 1946



இறப்பு 04 • 10 • 2023

### வேலுப்பிள்ளை கந்தசாமி

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை கந்தசாமி நேற்று (04.10.2023) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை செல்லம் தம்பதியரின் அன்பு மகனும், மல்லாகத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற பொன்னம்பலம் மற்றும் தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற கனகலட்சுமியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான இராமசாமி, குமாரசாமி, பரமசாமி, சிவசிதம்பரம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், மகாலட்சுமி, அமிர்தலிங்கம், காலஞ்சென்ற விஜயலட்சுமி மற்றும் நிர்மலாதேவி (ஆசிரியை, குளமங்கால் R.C.), மகாலிங்கம் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், அகிலன், மணிவண்ணன் (ஆசிரியர், யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி), பார்த்தீபன், அனுசியா (பிரதேச செயலகம் - சங்கானை), அஜந்தா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், நிலானி, சத்தியகலா (அ.உ.பிரதேச சபை, மானிப்பாய்), ரதிதேவி (லதுஷா), மதனராஜன் (பிரதேச செயலகம், சங்கானை), சஜந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சந்தோஷ், ஆருஷன், ஆதர்ஷன், அஸ்விதன், அறிவன், அபூர்வன், சாத்விகா, ஷரோன், சைந்தவி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது மகனின் (மல்லாகம்) இல்லத்தில் இன்று (05.10.2023) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக மல்லாகம் அளவெட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**தொந்தனை வீதி,**
**மல்லாகம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

பிறப்பு 24 • 09 • 1982



இறப்பு 04 • 10 • 2023

### செல்வராசன் அகிலேஸ்வரன்

நவற்கிரி அச்சுவேலியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வராசன் அகிலேஸ்வரன் நேற்று (04.10.2023) புதன்கிழமை காலமானார்.

அன்னார் செல்வராசன் - இந்திராணி தம்பதியரின் அன்பு மகனும், சர்மினி, ரஜீவ், ஸ்ரீசெல்வாஜினி (துங்கா), சரண்ஜா ஆகியோரின் அன்புச் சகோதரனும், தர்மஸ்ரீ (ஜேர்மனி), கஜன் ஆகியோரின் மைத்துனரும், திசாந், சைந்தவி, கபிஷா, டிசாந், அனித் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.10.2023) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நண்பகல் 12.00 மணியளவில் நிலாவரை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**நவற்கிரி, அச்சுவேலி.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 8758 943**

(CR 40713) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீதித்துறை...

மருதனார்மடம் சந்தியில் இருந்து ஆர்ப்பாட்டப் பேரணி யாழ்ப்பாணம் நகர் நோக்கிப் புறப்பட்டதுடன், மருதனார் மடத்தில் இருந்து யாழ்ப்பாணம் நகர் வரையுள்ள முக்கியமான சந்திகளில் மனிதச் சங்கிலிப் போராட்டமும் முன்னெடுக்கப்பட்டது.

காலை 9.30 மணியளவில் போராட்டம் ஆரம்பமானது. அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள், பொது அமைப்பினர், பொதுமக்கள் எனப் பல தரப்பினர் இந்தப் போராட்டத்தில் பங்கெடுத்தனர்.

கோண்டாவில் உப்புமடச் சந்தி, கொக்குவில் சந்தி ஆகிய இடங்களில் ஒன்று கூடியவர்கள் வீதியின் இரு மருங்கும் கைகளை இணைத்து நின்று போராட்டத்துக்கு ஆதரவளித்தனர்.

மருதனார்மடத்தில் இருந்து புறப்பட்ட பேரணி காங்கேசன்துறை வீதிவழியாக யாழ்ப்பாணம் நகரை முற்பகல் 11.45 மணிக்குச் சென்றடைந்தது.

நீதிபதிக்கு இந்த நிலையா?, ஒரு நாட்டில் இரு சட்டமா? இனவாதிகளைக் கைது செய், குருந்தூர்மலை தமிழர் சொத்து வெடுக்குநாறி எங்கள் சொத்து, வடக்கும் கிழக்கும் தமிழர் தாயகம் போன்ற கோஷங்களை எழுப்பியவாறு பேரணி நகர்ந்தது.

நேற்றைய போராட்டத்தில் யாழ்ப்பாணம் சிவகுரு ஆதீன முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகள், நாடாளுமன்ற உறுப்பினர்களான தர்மலிங்கம் சித்தார்த்தன், சி.வி.விக்னேஸ்வரன், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான மாவை சேனாதிராசா, நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்களான எம்.கே.சிவாஜிலிங்கம், சுரேஷ் பிரேமச்சந்திரன், ந.ஸ்ரீகாந்தா, ஜனநாயகப் போராளிகள் கட்சியின் தலைவர் சி. வேந்தன், புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல், வடமாகாண அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம், வடமாகாண முன்னாள் கல்வி அமைச்சர் க.சர்வேஸ்வரன், வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர்களான விந்தன் கனகரத்தினம், கேசவன் சயந்தன், பா. கஜதீபன், து.ரவிகரன், யாழ்.மாநகர சபையின் முன்னாள் முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணன், முன்னாள் பிரதி முதல்வர் து.ஈசன், வலிகாமம் கிழக்குப் பிரதேசசபையின் முன்னாள் தவிசாளர் தி.நிரோஷ், உள்ளூராட்சி சபைகளின் முன்னாள் உறுப்பினர்கள், முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, மன்னார் ஆகிய ஐந்து மாவட்டங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் சட்டத்தரணிகள், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், சிவில், சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (அ-எ-20-66)

## மனிதப்புதைகுழி...

என்று முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் கைவிரித்துள்ளது என்று அகழ்வுப் பணிக்குழு தெரிவித்துள்ளது.

கொக்குத்தொடுவாயில் இனங்காணப்பட்ட இடத்தில் 9 நாள்கள் அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டிருந்த நிலையில் 17 மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகள் கண்டுபிடிக்கப்பட்டிருந்தன. அகழ்வுப் பணிகள் ஒக்ரோபர் மாதம் இறுதி வாரம் வரையில் முன்னெடுக்கப்படும் என்று ஆரம்பத்தில் கூறப்பட்டிருந்த போதும், கடந்த 15ஆம் திகதியுடன் அகழ்வுப் பணிகள் இடைநிறுத்தப்பட்டன.

தற்போது அகழ்வுப் பணிகளைத் தொடர்ந்து முன்னெடுப்பதற்கு நிதி இல்லை என்று மாவட்டச் செயலகம் கைவிரித்துள்ளது என்று அகழ்வுப் பணிக்குழு தெரிவித்தது. அகழ்வு முன்னெடுக்கப்படும் பகுதியை மழை காலத்தில் பாதுகாப்பதற்குரிய கொட்டகை அமைத்தல் உள்ளிட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கோரப்பட்டிருந்த நிலையில் மாவட்டச் செயலகக் கணக்காய்வுப் பிரிவு அதற்கான நிதி இல்லை என்று அறிவித்துள்ளது என்றும் அகழ்வுப் பணிக்குழு தெரிவித்தது.

இது தொடர்பாக முல்லைத்தீவு மாவட்டச் செயலர் உமாமகேஸ்வரனிடம் கேட்ட போது, மாவட்டச் செயலகத்தால் உடனடியாக நிதியை விடுவிக்கமுடியாது. அவற்றுக்குரிய நடைமுறைகளுக்கு அமையவே நிதியை விடுவிக்கமுடியும். கொக்குத்தொடுவாய் புதைகுழி அகழ்வு நடவடிக்கைக்காக நிதியமைச்சு 57 இலட்சம் ரூபாவை ஒதுக்கியிருந்தது. அதற்கான கடிதம் கிடைத்தபோதும் இன்னமும் நிதி கிடைக்கவில்லை. அவசர தேவை கருதி முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் நெற்கொள்வனவுக்காக வைத்திருந்த நிதியில் இருந்து அகழ்வுப் பணிகளுக்கு நிதி ஒதுக்கப்பட்டது. சுமார் 20 இலட்சம் ரூபா வரையில் மாவட்டச் செயலகத்தால் நிதி வழங்கப்பட்டது.

தற்போது இரண்டாம் கட்டத் தேவைகளுக்காக நிதி கோரப்பட்டுள்ளது. நடைமுறைகளுக்கு அமையவே நிதியை வழங்கமுடியும். இது தொடர்பாகக் கோரிக்கைக் கடிதம் வழங்கப்பட்டு திறைசேரிக்குழுவுக்கு அது அனுப்பப்பட்டு ஒப்புதல் கிடைப்பதற்கு குறைந்தது 4 நாள்களுக்கு மேல் தேவைப்படும். மாவட்டச் செயலகத்தால் நெற்கொள்வனவுக்காக ஒதுக்கப்பட்டிருந்த நிதியும் முடிவடைந்துள்ள நிலையில், தற்போது உடனடியாக நிதி வழங்க முடியாதுள்ளது' என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்த அகழ்வுப் பணிகள் முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜா முன்னிலையிலேயே முன்னெடுக்கப்பட்டு வந்தன. தனது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்றும், அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுகின்றன என்றும் தெரிவித்து ரி.சரவணராஜா தனது நீதிபதிப் பதவிகளைத் துறந்து வெளிநாடு ஒன்றுக்குச் சென்றுள்ளார்.

இந்தநிலையில், கொக்குத்தொடுவாய் புதைகுழி அகழ்வு நடவடிக்கைகளுக்கு நிதி தாமதப்படுத்தப்படுகின்றது என்ற தகவல் வெளியாகியுள்ளது. கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி விவகாரத்தை மூடிமறைக்கும் நிகழ்ச்சி நிரல் முன்னெடுக்கப்படுகின்றதா என்ற சந்தேகத்தை இது தமிழ் மக்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது. (அ-எ-19-125)

## திடீர்ப்...

சேவைகள் தாமதமடைந்தன. இந்தப் பணிப்புறக்கணிப்பால் அலுவலக ரயில் சேவைகள் உட்பட தபால்ரயில்சேவை உள்ளடங்கலாக 78 ரயில் சேவைகள் இரத்தாகியுள்ளன என்று ரயில் நிலையப் பொறுப்பதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

நேற்றுக்காலை மாளிகாவத்தையில் பிரதிக் கட்டுப்பாட்டாளர் ஒருவருக்கும் ரயில் பாதுகாப்பு சேவை அதிகாரி ஒருவருக்கும் இடையே மோதல் ஏற்பட்டுள்ளது. தாக்குதலை மேற்கொண்ட ரயில் பாதுகாப்பு ஊழியரின் சேவையை இடைநிறுத்தவேண்டும் என்று கோரி கட்டுப்பாட்டாளர்கள் சங்கம் இந்தத் தொழிற்சங்க நடவடிக்கையை ஆரம்பித்துள்ளது.

இந்தப் பணிப்புறக்கணிப்பால் தொழில் உட்பட பல்வேறு தேவைகளுக்காக ரயிலில் பயணிப்பதற்காகக் காத்திருந்த பயணிகள் பெரும் அசௌகரியத்துக்கு உள்ளாகியிருந்தனர். அதையடுத்து, நேற்று மாலை கொழும்பு கோட்டை மற்றும் மருதானை ரயில் நிலையங்களுக்கு பொலிஸ் மற்றும் இராணுவத்தினர் வரவழைக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது. (அ-எ-இ)

## அரசியல்...

காட்டிக்கொடுப்பது பெரிய விடயமாக அமையாது என்று சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

முல்லைத்தீவு நீதிபதி விவகாரம் தொடர்பில் நாடாளுமன்றத்தில் நேற்று கருத்து வெளியிட்டபோதே நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டு மக்களில் பெரும்பான்மையாக வாழ்வது சிங்கள மக்கள். அவர்களின் வரிப் பணத்தில் கல்வி கற்று, பல வருடங்கள் சம்பளம் பெற்று, சகல வரப்பிரசாதங்களையும் அனுபவித்துவிட்டு, சிங்கள மக்கள் தமக்கு இடையூறு விளைவிக்கின்றனர் எனக் குறிப்பிட்டு அரசியல் தஞ்சத்துக்காக வெளிநாடு செல்வது கீழ்த்தரமான செயற்பாடாகும். சிங்கள மக்களுக்கு வடக்கில் வாழ்வதற்கான உரிமை இல்லை. காணி வாங்கவோ அல்லது வியாபாரத்தை முன்னெடுப்பதற்கான சூழ்நிலையும் இல்லை. முஸ்லிம் மக்களுக்கும் அவ்வாறே. ஆனால் 52 வீதமான தமிழ் மக்கள் தெற்கில் சிங்கள மக்களுடன் இணைந்து சிறப்பாக வாழ்கின்றனர். யாருக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது? அதைச் சுட்டிக் காட்டும் எமக்கு இனவாதி முத்திரை குத்தப்படுகின்றது.

வடக்கில் பௌத்த அடையாளங்கள் அழிக்கப்பட்டு வருகின்றன. அங்கு தொல்லியல் சட்டத்தை நடைமுறைப்படுத்த முற்பட்டால் அச்சுறுத்தல் விடுக்கப்படும் நிலை காணப்படுகின்றது. வடக்கில் தனி நாடு உள்ளதா என்றுதான் கேட்க வேண்டியுள்ளது. பௌத்த அடையாளம் காணப்பட்ட இடங்களில் சிவலிங்கம் சிலை வைக்கப்படுகின்றது. இதுதான் மத நல்லிணக்கமா?

இந்தச் சூழ்நிலையில் நீதிபதி (முல்லைத்தீவு) அன்று வழங்கிய தீர்ப்பு நியாயமானதா எனக் கேட்கின்றேன்.

அச்சுறுத்தல், அழுத்தம் காரணமாகவே நாட்டை விட்டு வெளியேறினேன் என்று முல்லைத்தீவு நீதிபதி கூறியுள்ளார். மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் விசாரணையில் உள்ள ஐந்து வழக்குகளில் அவர் பிரதிவாதியாகப் பெயரிடப்பட்டுள்ளார். அதனாலேயே நீதிச்சேவை ஆணைக்குழு ஊடாக, சட்டமா அதிபரின் ஒத்துழைப்பை அவர் கோரியுள்ளார். நீதிபதியாக அல்ல பயனாளியாகவே அன்று சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அவர் வந்துள்ளார். தீர்ப்புகளை மாற்றவேண்டும் என்று அழுத்தம் கொடுக்கவில்லை என சட்டமா அதிபர் தெரிவித்துள்ளார்.

உயிர் அச்சுறுத்தல் இருந்திருந்தால் அவர் நீதிபதி என்பதால் பிடியாணை பிறப்பித்திருக்க முடியும். நாட்டைவிட்டு வெளியேறுவதற்கு ஒரு வாரத்துக்கு முன்னர் அவர் வாகனத்தை விற்றுள்ளார். மேற்குலகத் தூதுவர்கள் இருவரையும் சந்தித்துள்ளார். தமக்கான பாதுகாப்புக் குறைக்கப்பட்டது என அவர் கூறினாலும், அதைப் பொலிஸார் நிராகரித்துள்ளனர்.

நீதிபதியின் மனைவி, நீதிச்சேவை ஆணைக்குழுவிடம் முறைப்பாடொன்றைச் செய்துள்ளார். அச்சுறுத்தல் இருந்தால் அதை விடுத்தது யார் என அவர் கூற வேண்டும். பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் ஆலோசனையின் பேரிலும், ஜனாதிபதியின் பணிப்புரைக்கமையவும் விசாரணைகள் இடம்பெறுகின்றன. உண்மை கண்டறியப்பட்டு, அது தொடர்பில் மக்களுக்கு தெளிவுபடுத்தப்படவேண்டும். மேற்குலகில் அரசியல் தஞ்சம் பெறுவதற்காக தமது சுயகௌரவத்தையே காட்டிக்கொடுக்கும் நபர்களுக்கு, நிழல் தந்த தாய் நாட்டைக் காட்டிக்கொடுப்பது பெரிய விடயமாக அமையாது - என்றார். (அ-எ-44)

## காங்கேசன்- ...

பரீட்சார்த்தமாக ஆரம்பிக்கப்படவுள்ள நாகப்பட்டினம் - காங்கேசன்துறை கப்பல்சேவை மாரிகாலம் ஆரம்பிக்கவுள்ளதால் எதிர்வரும் பதினைந்தாம் திகதியுடன் நிறுத்தப்பட்டுப் பின்னர், எதிர்வரும் ஜனவரி 15ஆம் திகதி மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்த படகில் 150 பயணிகள் மட்டுமே பயணம் செய்ய முடியும் என்றும் பயண நேரம் மூன்று மணித்தியாலங்களாக இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தக் கப்பல்சேவைக்கு ஒரு வழி பயணக்கட்டணமாக 25 ஆயிரத்து 500 இலங்கை ரூபா அல்லது 6 ஆயிரத்து 500 இந்திய ரூபா என அறவிடப்படும்.

பயணிகள் 50 கிலோ எடையுள்ள பொதிகளை இலவசமாக எடுத்துச்செல்ல முடியும். மேலதிக எடைக்கு மேலதிக கட்டணம் அறவிடப்படும். பயணச்சீட்டுகளை நாகபட்டினத்திலும் இலங்கையிலுள்ள ஆஷா ஷிப்பிங் ஏஜென்சிஸ் நிறுவன அலுவலகங்களிலும் பெற்றுக்கொள்ள முடியும். கொழும்பு,திருகோணமலை, அம்பாந்தோட்டை, யாழ்ப்பாணத்தில் விரைவில் இந்த நிறுவனத்துக்கான அலுவலகங்கள் திறக்கப்படவுள்ளன.

இந்திய கப்பல் கூட்டுத்தாபனத்தால் நடத்தப்படவுள்ள நாகப்பட்டினம்காங்கேசன்துறை படகுச்சேவையின் உள்ளூர் முகவர்களாக ஆஷா ஷிப்பிங் ஏஜென்சிஸ் நிறுவனம் நியமிக்கப்பட்டுள்ளது.

தற்போது யாழ்ப்பாணத்தில் தங்கியுள்ள ஆஷா ஷிப்பிங் ஏஜென்சிஸ் நிறுவனத்தினர் சுங்க அதிகாரிகளுடனும் துறைமுக அதிகாரிகளுடனும் பேச்சு நடத்தி வருகின்றனர். காங்கேசன்துறை துறைமுகத்தில் குடிவரவு குடியகல்வு அதிகாரி ஒருவரும் நியமிக்கப்படவுள்ளார்.

பயணிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் பட்சத்தில் ஜனவரி முதல் அதிகளவு பயணிகளை ஏற்றிச்செல்லக்கூடிய கப்பல் ஒன்றை சேவையில் ஈடுபடுத்துவதற்கு தாம் திட்டமிட்டுள்ளோம் என்றும் ஆஷா ஷிப்பிங் ஏஜென்சிஸ்அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இந்தப் பயணிகள் கப்பலுக்கு 'செரிபாணி' என பெயரிடப்பட்டுள்ளது. (அ-எ-6)

## உலகக்கிண்ண...

10 அணிகள் பங்குபற்றும் இந்தத் தொடரின் முதலாவது ஆட்டத்தில் இங்கிலாந்து மற்றும் நியூஸிலாந்து அணிகள் இன்று மோதுகின்றன. அகமதாபாத் மைதானத்தில் பகலிரவு ஆட்டமாக நடைபெறும் இந்த ஆட்டம் இன்று பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. (அ-ம)

## மன்னாரிலும்...

இந்தப் போராட்டத்தை ஏற்பாடு செய்திருந்தனர். மன்னார் நகர பிரதான சுற்றுவட்டத்தில் மு.ப. 10 மணி முதல் நண்பகல் 12 மணிவரை போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (அ-எ-213)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு தூக்குத்தான்

## எதிரணி ஆவேசம்



கொழும்பு, ஒக். 5

**இலங்கை சர்வதேசத்தில் குற்றவாளிக் கூண்டில் நிற்கின்றது, இப்படியான சட்டங்களை (நிகழ்நிலை) இயற்றினால் அடுத்து தூக்கு மேடைதான் என்று எதிரணி பிரதம கொறடாவும், நாடாளுமன்ற உறுப்பினருமான லக்ஷ்மன் கிரியல்ல தெரிவித்தார்.**

நாடாளுமன்றம் நேற்றுமுன்தினம் முற்பகல் 9.30 மணிக்கு பிரதி சபாநாயகர் தலைமையில் கூடியது.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸால் நிகழ்நிலைக் காப்புச் சட்டவரைவு சபையில் சமர்ப்பிக்கப்பட்டது. அவ்வேளையில் எழுந்த லக்ஷ்மன் கிரியல்ல, சட்ட வரைவுக்கு எதிர்ப்பு வெளியிட்டார்.

'இந்த சட்டவரைவுக்கு சர்வதேச மட்டத்தில் கடும் எதிர்ப்பு உள்ளது. சர்வதேசத்தில் குற்றவாளிக் கூண்டில் தான் நாம் (இலங்கை) நிற்கின்றோம். இந்தச் சட்டம் வந்தால் அடுத்து தூக்குத்தான். கடந்த முறை ஜெனிவாக் கூட்டத்தொடருக்கு நீதி அமைச்சர் சென்றார், இம்முறை செல்லவில்லை. நிலைமை அப்படித் தான் உள்ளது. தொலைத்தொடர்பு என்பது ஊடக அமைச்சருக்குரியது. அதனை எப்படி பொலிஸ் அமைச்சர் தாக்கல் செய்ய முடியும்? அப்படியானால் தொலைத் தொடர்பையும் பொலிஸாரிடம் ஒப்படைத்துவிட்டனர் போலும்' - எனச் சுட்டிக்காட்டினார்.

இதற்குப்பதிலளித்த பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ், " இவர்களின் (நல்லாட்சி) ஆட்சிக்காலத்தில் தான் இந்தச் சட்டவரைவு கொண்டுவரப்பட்டது. நீதிஅமைச்சில் இருந்த சட்டவரைவு, சிறு திருத்தங்களுடன் தற்போது எம்மிடம் வழங்கப்பட்டுள்ளது. 2016 இல் சட்ட ஆணைக் குழுவால் தயாரிக்கப்பட்ட ஆவணம்தான் இது' - என்று குறிப்பிட்டார்.

அதேவேளை, சட்ட வரைவுக்கு எதிராக நீதிமன்றத்தை நாடுவோம் என்று சட்டத்துறை பேராசிரியரான ஜி.எல். பீரிஸ் குறிப்பிட்டார். (ஒ-44)

## முன்பள்ளிகளுக்கு கற்றல் உபகரணம்



சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு பச்சிலைப்பள்ளி பிரதேசத்திலுள்ள 6 முன்பள்ளிகளுக்கு உலகவங்கி செயற்றிட்டத்தினூடாக கற்றல் விருத்திச் செயற்பாட்டுக்குரிய உபகரணங்கள் கடந்த திங்கட்கிழமை வழங்கி வைக்கப்பட்டன. பிரதேச செயலர், உதவிப் பிரதேச செயலர் ஆகியோர் அந்தந்த முன்பள்ளிகளுக்குச் சென்று வழங்கி வைத்தனர். (ச-9)

## சுதந்திரங்களைப் பறிக்கும் சட்டவரைவுகளை எதிர்ப்போம்

### முன்னாள் மேயர் மணிவண்ணன் தெரிவிப்பு

கருத்துச் சுதந்திரம் என்பது அடிப்படை உரிமையாக அரசமைப்பிலுள்ள நிலையில் அதை கேள்விக்குட்படுத்துகின்ற விதமாக எந்தச் சட்டவரைவு கொண்டுவரப்படுகிறதோ அதனை அனைவரும் ஒன்றிணைந்து எதிர்க்கவேண்டும் என யாழ்.மாநகர முன்னாள் மேயர் வி.மணிவண்ணன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் மேலும் தெரிவித்ததாவது-

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கிவிட்டு புதிதாக பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தைக் கொண்டு வருவதற்கு அரசாங்கம் முனைப்பாக இருக்கின்றது. நிகழ்நிலைக் காப்புச் சட்டம் என்ற இன்னு மொரு சட்டவரைவையும் முன்வைத்திருக்கின்றது. இரண்டு சட்டவரைவுகளும் அரசாங்கத்துக்கு எதிராக மக்கள் தங்கள் கருத்துகளை முன்வைக்க விடாமல் தடுப்பதை நோக்காகக் கொண்டே கொண்டுவரப்படவிருக்கின்றன.

இந்தச் சட்டவரைவுகள் நிறைவேற்றப்பட்டு சட்டமாக்கப்பட்டால் கருத்து வெளிப்பாட்டுச்சுதந்திரத்துக்காக மக்கள் தண்டிக்கப்படலாம். இது ஆபத்தானது. இதை எதிர்க்க வேண்டும் - என்றார். (ஒ-20)


வேலையாள்கள் தேவை

யாழ். மாநகர சபை எல்லைக்குள் இயங்கும் எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு எரிபொருள் நிரப்புனர்கள் (Pumper) தேவை. (es.52384) (N

076 948 1587

IELTS Academic General UKVI

#Student VISA மூலம் வெளிநாடு செல்வோருக்கானது
# Unique Test Tips
# 40 hrs with free 4 mock exam
# Latest course Material (Book 18)
நேரடி , zoom வகுப்புக்களாக

A1 IELTS Life Skills
திருமணம் செய்து UK செல்வோருக்கானது

B1 Skilled Worker Visa
மூலம் வெளிநாடு செல்வோருக்கானது

DMI , British Council இன்
அங்கீகரிக்கப்பட்ட பரீட்சை பதிவு மையமாகும்

புதிய பிரிவு ஆரம்பம் 7/10/2023-SAT, 9/10/2023-MON-9 am or 3 pm

யாழில் ஆங்கிலக்கல்விக்கு No.1 பயிற்சி மையம்
DIPLOMA IN ENGLISH
SPOKEN ENGLISH
DMI COMPUTER EDUCATION
0777 17 35 17

DMI COMPUTER EDUCATION
யாழ்ப்பாணம் No.113, 0777 24 07 07 021 222 4403

| | | | | |
|---|---|---|---|---|
| நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் | சண்டிலிப்பாய் | கிளிநொச்சி |
| 021 226 2470 | 021 227 0775 | 021 224 1970 | 021 225 6665 | 021 228 5655 |
| 0777577333 | 0777227074 | 0776032300 | 0761354503 | 0776398096 |

பதவி வெற்றிடம்

யாழ். பிரதான வீதியில் அமையவுள்ள வெளிநாட்டவர்களுக்கும் மற்றும் தமிழ் உறவுகளுக்கும் இலங்கையின் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்யும் Souvenir Central (Pvt) Ltd எனும் வியாபார ஸ்தாபனத்திற்கு பின்வரும் பதவி வெற்றிடங்கள் உள்ளன.

1. **பெண் முகாமையாளர்** - ( Manager - Full Time ) (ஆங்கிலம் மற்றும் கணனி தொடர்பான அறிவு இருப்பது சிறந்தது.)
2. **பகுதி நேர வேலையாளர்கள்** - (பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் ஓய்வு பெற்றவர்களுக்கு உகந்தது)

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்
077 478 0421 / 077 188 6719

காணி விற்பனைக்கு

கொடிகாமத்தில் A9 வீதியில் 03 பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு. (es.52378) (N.1)


074 372 6459, 076 769 3438

வேலைவாய்ப்பு

நெல்லியடி வண்ணமயில் புடைவை கடைக்கு அனுபவம் உள்ள அல்லது பழக விரும்பும் பெண் / ஆண் விற்பனை உதவியாளர்கள் தேவை. திறமைக்கேற்ப கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும். (es.26555) (N.1)

077 805 2735


## மரண அறிவித்தல்



### கந்தசாமி கிருஷ்ணமூர்த்தி

(இளைப்பாறிய சாரதி இ.போ.ச.காரைநகர் - C.T.B அப்புத்துரை)

பண்ணாகத்தை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி கிருஷ்ணமூர்த்தி நேற்று (04.10.2023) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தசாமி வள்ளியாச்சி தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் அமுதவல்லி தம்பதியரின் மருமகனும், புஷ்பலட்சுமியின் அன்புக் கணவரும், மயூரதனின் (பிரான்ஸ்) அன்புத் தந்தையும், விசாகினியின் பாசமிகு மாமனாரும் அனவிகா, அஷ்விகா ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்றவர்களான சீனிவாசகம், பொன்னம்மா, ஆறுமுகசாமி, பேரின்பநாதன் (பிரான்ஸ்) மற்றும் சறோஜா, தேவமலர், தேவராசா ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்றவர்களான பாலசுப்பிரமணியம் கமலாதேவி மற்றும் சிவசுப்பிரமணியம், கனகம்மா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.10.2023) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி - கி.புஷ்பலட்சுமி
021 225 0021

(es.52385) (N.1)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 05.10.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.